# உங்களாலும் முடியும் கின்னஸில் இடம் பெற!

பாபநாசம்
குறள்பித்தன்



# உங்களாலும் முடியும் - கின்னஸில் இடம்பெற!

தமிழக அரசின் விருது பெற்ற எழுத்தாளர்
**பாபநாசம் குறள்பித்தன்**

**ஜெயராணி**

27, அனெக்ஸ்-7,
அன்னை இந்திரா நகர்,
திருநின்றவூர்,
சென்னை-602 024.
தொலைபேசி எண்: 26300392

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு: | | **உங்களாலும் முடியும் - கின்னஸில் இடம் பெற!** |
| நூலாசிரியர் | : | **பாபநாசம் குறள்பித்தன்** |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 2006 |
| விலை | | ரூ.35.00 |
| நூல் அளவு | | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 96 பக்கங்கள் |
| எழுத்து | | 12 புள்ளிகள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| ஒளி அச்சு | : | குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-78 |
| அச்சிட்டோர் | : | அம்சா ஆப்செட், சென்னை. |
| வெளியீடு | | **ஜெயராணி** |

27, அனெக்ஸ்-7,
அன்னை இந்திரா நகர்,
திருநின்றவூர்,
சென்னை-602 024.
தொலைபேசி எண்: 26300392

# இது -
# சாதனையாளர்களுக்காக...

கின்னஸில், ஒருவர் இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. அதே நேரம்...

முயற்சியும், உழைப்பும் குறையாமல் உள்ளத்தில் இருந்தால் போதும் என்பதோடு...

ஈச்சமரத்தின் ஓலைகள் சருகான பின்னும், மழைக்கும், வெயிலுக்கும் - ஏன் புயல் காற்றுக்கும்கூட எப்படி உதிராமல் இருக்கின்றதோ, அப்படி ஒருவரின் இதயத்தில் எந்த நிலையிலும் நம்பிக்கை மட்டும் உதிராமல் இருந்தால், அவர்கள் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் காலைப் பதிப்பது மிக எளிதானது. அவர் களின் முகவரியைத் தேடி கின்னஸே ஓடிவரும். இது சத்தியம்.

சாதனை செய்ய விரும்புகின்றவர்கள், அந்தச் சாதனையால் பிறருக்குப் பயன் ஏற்படுமா...? என்று சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

அத்தகையச் சாதனைகள்தான் கற்றோரால் போற்றப்படும்...

ஒருவர் பல லிட்டர் இரத்த தானம் செய்து சாதனைப் படைத் திருக்கிறார் என்றால், அச்சாதனையால் பல உயிர்கள் பாதுகாக்கப் பட்டிருக்கிறது என்று பொருள்.

இரண்டு கால்களையும் இழந்த ஒருவர் தீயணைப்புப் படையிலே சேர்ந்து, பல உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார் என்றால், இது பலருக்கு நம்பிக்கையை வளர்த்திருக்கிறது என்பது பொருள்.

கார் டயர்களைத் தின்பதும், பல்புகளைத் தின்பதும், பலரறிய திறந்த வெளியரங்கிலே பலருக்கு முத்தங்களைக் கொடுப்பதும்

சாதனையா...? சிந்திக்க விரும்புகின்ற சிந்தனையாளர்களுக்கே இதை விட்டுவிடுகிறேன்.

சாதனையாளர்கள் சிந்திக்க வேண்டும். சிந்திப்போடு நிற்காமல் நல்ல செயல்பாடு மிக்க சாதனைகளைச் செய்யவும் முயல வேண்டும் என்பது எமது எண்ணம்.

இந்நூலிலே, கின்னஸில் கால் பதித்தவர்களை எழுதியதோடு, அந்த முயற்சில் முனைப்போடு ஈடுபட்டிருக்கிற சாதனையாளர் களையும், குறிப்பாக சிறுவர்களையும் எழுதி இருக்கிறேன்.

காரணம், அவர்களுக்கு மேலும் உற்சாகமும், உத்வேகமும் ஏற்படும்; ஏற்பட வேண்டும் என்பதால்தான்.

மேலும், எப்போதும் போல் என் படைப்புகளை நூலாக்கி மகிழும் பதிப்பக உரிமையாளர் அவர்களுக்கும், சென்னையிலுள்ள 'மக்கள், மனித நேய அறக்கட்டளை'யின் உரிமையாளர் **திருமிகு.மல்லிகா துரைசாமி** அவர்களுக்கும், இனிய இளவல் **கவிஞர் உ.தாமரைச் செல்வன்** அவர்களுக்கும், சிறந்த முறையிலே ஒளிஅச்சு வடிவமைத்துத் தந்த கெழுதகை நண்பர் **த.ச.மனோகரன்** அவர்களுக்கும் என் நன்றி!

வழக்கம் போல், என் எழுத்திற்கும் இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த்துணைவியார் **நீலா கண்ணன்** அவர்களுக்கு என் வணக்கமும், வாழ்த்தும்.

நட்புடன்,
**குறள்பித்தன்.**

***13/1, 2-வது குறுக்குச்சந்து,***
***வெள்ளாளர் தெரு,***
***கோடம்பாக்கம்,***
***சென்னை-600 024.***
***கைபேசி: 94444 54335***

# உங்களாலும் முடியும் - கின்னஸில் இடம் பெற!

கின்னஸில் இடம் பெறுவது கிள்ளுக்கீரையா என்ன...? என்று நீங்கள் நினைப்பது சரிதான்.

எந்த ஒரு செயலிலும் வெற்றி பெற முடியும் என்பதை முதலில் இதயத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

பின்னர், அத்தோடு முயற்சியும், சலியாத உழைப்பும், தளராத நம்பிக்கையும் யாரிடம் நிறைந்திருக்கிறதோ அவர்கள் உறுதியாக கின்னஸில் கால் பதிக்கலாம்; பெயரையும் இணைக்கலாம். சரி...

இனி கின்னஸில் இடம் பெறுபவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய அரிய ஆதார செய்திகள் இவை...

கின்னஸ் புத்தகம் ஆண்டுதோறும் வெளிவருகிறது. விற்பனையில் சில கோடிகளைத் தொட்டு இருக்கிறது.

பிரெஞ்சு, ஜப்பான், டேனிஷ், நார்வே, ஸ்பானிஷ், சைனா, ரஷ்யா என்று உலகிலுள்ள நாற்பது மொழிகளில் 'கின்னஸ் புக் ஆஃப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ்' வெளி வருகிறது.

இப்புத்தகத்தில் உங்கள் பெயர் இடம் பெற, நீங்கள் செய்ய வேண்டியது இதுவே...

நீங்கள் யாரும் செய்யாத ஒரு செயலைச் செய்ய வேண்டும். வேறு ஒருவர் செய்த சாதனையை நீங்கள் மிஞ்சும் அளவிலே முறியடிக்கவும் செய்யலாம்.

இதற்கு வயதோ, படிப்போ முக்கியமல்ல. செய்யும் சாதனையே முக்கியம்.

நீங்கள் உங்கள் சாதனையை தக்கச் சான்றுகளுடன் நிருபிக்க வேண்டும். கின்னஸ் புத்தகத்தின் நிறுவன அனுமதி பெற்ற பிறகே நீங்கள் உங்கள் சாதனையைத் தொடங்க வேண்டும்.

நீங்கள் செய்யும் சாதனை வெளிவந்த பத்திரிகை செய்திகள், நிழற்படங்கள், சாதனை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கியப் பிரமுகர்களின் கையொப்பத்தோடு கூடிய சான்றிதழ் போன்றவற்றை எல்லாம் இலண்டன் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நீங்கள் செய்கின்றபோது ஏற்படுகின்ற இலாப நஷ்டங்களுக்கோ, கஷ்டங்களுக்கோ, பொருள் இழப்பிற்கோ, உயிர் மற்றும் விபத்திற்கோ நிறுவனம் பொறுப்பேற்காது. எல்லாவற்றிற்கும் நீங்களே பொறுப்பேற்க வேண்டும்.

சரி, கின்னஸில் கால்பதிக்க எண்ணி விட்டீர்களா...? வாழ்த்துக்கள். இதோ கின்னஸ் முகவரி:

**எடிட்டோரியல் அலுவலகம்,**
**கின்னஸ் சூப்பர்லேடிவ்ஸ் லிமிடெட்,**
**33, இலண்டன் ரோடு, என்பீல்டு,**
**மிடில்செக்ஸ்,**
**இ.எண்.26,**
**டி.ஜே. இலண்டன், யு.கே.**

# பதிப்புரை

## நீங்களும் வெற்றி பெறலாம்...

கவிஞரும் எழுத்தாளருமான பாபநாசம் குறள் பித்தனின் எழுத்துக்களை எங்கள் பதிப்பகத்தின் வழியே பல ஆண்டுகளாக வாசகர்களுக்கு வழங்கி வருகிறோம்.

அவரது சிந்தனையும் எழுத்தும் ஊக்கமும், தன்னம்பிக்கையை வளர வழிவகுக்கும் என்பதால்தான் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம்.

முந்தைய நூல்களுக்கு தந்த வரவேற்பினைப் போல் இந்நூலிற்கும் ஆதரவு தந்து சிறப்பிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இந்நூல் தன்னம்பிக்கை யையும், எதிர்கால சிந்தனையையும் வளர்க்கும் என்பது உறுதி.

நட்புடன்,
**பதிப்பாளர்.**

# உங்களாலும் முடியும் - கின்னஸில் இடம் பெற!

# குறள் குடும்பம்

பெமிதா பாத்திமா வயது 17. சாஜிதா வயது 16. மெகருன்னிசா வயது 15. இவர்கள் மூவரும் சகோதரிகள்.

இவர்களிடம் திருக்குறளில் எந்தக் குறளை தலைகீழாக புரட்டி கேட்டாலும் மூவருமே பளிச்சென்று சொல்கிறார்கள்.

குறளில் முதல் வார்த்தையைச் சொன்னாலும், இறுதி வார்த்தையைச் சொன்னாலும் உடனே அந்தக் குறளை கடகடவென்று சொல்கிறார்கள்.

மேலும், எந்த அதிகாரத்திலாவது குறள் எண்ணை குறிப்பிட்டு கேட்டால் கூட அந்தக் குறள் அவர்களிடமிருந்து வந்து விடுகிறது.

மூவரும் இப்போது 40 நிமிடங்களில் 1330 குறளையும், பாராமல் ஒப்புவித்து வருகிறார்கள். சில விநாடிக்கு ஒரு குறள் வீதம் சொல்கிறார்கள்.

இந்த அற்புதமான ஆற்றல் எப்படி வந்தது...?

பெமிதா பாத்திமா சொல்கிறார்...

*“நான் 8-ஆம் வகுப்பு படித்து வரும்போது ஓய்வு கிடைக்கும் நேரத்தில் திருக்குறளை மனப்பாடம் செய்து வந்தேன். பின்னர் என் தங்கைகளுக்கும் சொல்லி கொடுத்தேன்...*

*இப்போது 1330 குறளையும் 40 நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுவோம்.*

*இன்னும் விரைவாக 1330 குறள்களையும் அரை மணி நேரத்தில் தமிழக முதல் அமைச்சரிடம் ஒப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பயிற்சி எடுத்து வருகிறோம்.*

*மேலும் 'கேளடி கண்மணி' படத்தில் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் ஒரு பாடலை மூச்சுவிடாமல் பாடி சாதனை செய்தார்.*

*அதே போல நாங்களும் ஒரே மூச்சில் 1330 குறளையும் சொல்லி கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பதே எங்கள் இலட்சியம்''* என்கிறார்.

இவர்கள் மூவரும் திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் படித்து மனப்பாடம் செய்து வருகிறார்கள்.

இவர்கள் திருக்குறளை விரும்பியதற்கான காரணத்தை இப்படி சொல்கிறார்கள்...

*''திருக்குறளில் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துக் கருத்துக்களும் உள்ளதால், அதை விரும்பி கற்றோம்'' என்று.*

தந்தை மீரான், தாயார் ஆரிபாவுமே இவர்களுக்கு ஆசானாக இருந்து குறளை பயிற்றுவித்திருக்கிறார்கள்.

முயற்சி செய்தால் சாதனைகளையும் சாதாரணமாக செய்யலாம் என்பதற்கு இந்த மூன்று சகோதரிகளே சான்று.

## முதல் கை-சாதனை!

**பி**ரான்சு நாட்டைச் சேர்ந்த லையான் நகரில் உள்ளது எட்வர்டு ஹெர்ராய்டு என்ற மருத்துவமனை.

இங்கு உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மருத்துவர்கள் அடங்கிய குழு ஒரு அரிய சாதனையை புரிந்துள்ளது.

அதாவது, 1989-ஆம் ஆண்டில் ஒருவர் (48) விபத்து ஒன்றில் தனது வலது கையை இழந்தார்.

அவருக்கு உடனே மாற்றுக் கை பொருத்தப்பட்டு உள்ளது.

இவ்வாறு மாற்றுக்கை பொருத்தப்படுவது இதுவே முதல் சாதனையாகும்.

கை தானம் செய்தவரின் பெயர் குறுப்பிடப்பட வில்லை.

இதுவரை கை கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள்தான் பொருத்தப்பட்டு வந்தது.

## வி.ஜி.பி. லட்டு!

**1992**-ஆம் ஆண்டில் · தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வி.ஜி.பி. நிறுவனங்களின் தலைவர் வி.ஜி.சந்தோஷம் மிகப்பெரிய லட்டு ஒன்றைத் தயாரித்தார்.

அந்த லட்டு உருவாக 1500 கிலோ சர்க்கரையும், 800 கிலோ கடலை மாவும், 450 கிலோ எண்ணெயும், 300 கிலோ டால்டாவும் பயன்படுத்தப்பட்டது.

அந்த லட்டு 6 அடி குறுக்காகவும், 3½ டன் எடையும் கொண்டதாகவும் இருந்தது.

இதனை 1996-ஆம் ஆண்டின் லிம்கா சாதனைப் பட்டியல் புத்தகம் உலகின் மிகப் பெரிய லட்டாக வெளியிட்டு சிறப்பித்து இருக்கிறது.

## எடை தூக்கி!

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் சீன நாட்டு வீராங்கனை நின்செதங் பளு தூக்கும் போட்டியில் புதிய சாதனை ஏற்படுத்தினார்.

59 கிலோ எடை பிரிவினருக்கான போட்டியில் அவர் 307.5 கிலோ தூக்கினார்.

அவர் ஸ்னாட்ஸ் முறையில் 137 கிலோவும், கிளீன் அன்ட் ஜெர்க் முறையில் 170 கிலோவும் தூக்கினார்.

பல்கேரிய வீராங்கனை நிகோலி பெசால்வ் 305 கிலோ தூக்கியதுதான் முந்தைய சாதனையாக இருந்தது.

## 1.7 கிலோ கத்தரிக்காய்!

கத்தரிக்காயை சிலர் வேண்டா வெறுப்பாக நினைப்பார்கள். அந்த கத்தரிக்காய் கூட சாதனை படைத்திருக்கிறது என்றால் வியப்படைவார்கள்... படியுங்கள்.

உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரில் ஜுவன்சிங் என்பவர் 2 அடி நீளம் கத்தரிக்காய் வளர்த்து சாதனை படைத்துள்ளார்.

மீரட்டில் சாஸ்திரி நகரை சேர்ந்தவர் ஜீவன்சிங் பிஸ்த். இவரது வீட்டுத் தோட்டத்தில் 2 அடி நீளம் பத்து அங்குல அகல கத்தரிக்காய் காய்த்துள்ளது. இது 1.7 கிலோ எடை உள்ளது.

இந்த கத்தரிக்காயை ஏராளமானோர் கண்டு வியப்படைந்தனர்.

இந்தக் கத்தரிக்காய் 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

## ராமா நாயுடு...

தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் ஏராளமான திரைப்படங்களை தயாரித்து உள்ளவர் பிரபல பட அதிபர் ராமா நாயுடு.

இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

உலகிலேயே மிக அதிக அளவு திரைப்படங்களை தயாரித்தவர் என்கிற பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது.

## வயதான தம்பதிகள்!

சீனாவில் தென்மேற்கு பகுதியிலுள்ள கூயிஜோவ் என்ற இடத்தைச் சேர்ந்தவர் லீகுவான்காய். இவர் வயது 101. இவரது மனைவி வாங் பாங் ஜென். இவரது வயது 102.

இவர்களது பெயர் கின்னஸ் உலக சாதனையாளர்கள் வரிசையில் இடம் பெற்றுள்ளது.

உலகிலேயே மிகவும் வயதான தம்பதிகள் இவர்களே ஆவார்கள்.

இவர்களுக்கு திருமணமாகி 83 ஆண்டுகள் ஆகின்றன. இவர்களது குடும்பத்தில் 5 தலைமுறையை சேர்ந்த 100 பேர் உள்ளனர்.

## நடந்து....

கேரள மாநிலம், கண்ணூர் அருகே கடலில் ''தர்மடாம் துரத்து'' என்ற ஒரு சிறு தீவு உள்ளது.

கடற்கரையில் இருந்து இத்தீவு சுமார் 250 மீட்டர் தொலைவில் உள்ளது.

அந்தத் தீவுக்கு சில இளைஞர்கள் நடந்து சென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த சாதனை நிகழ்ச்சிக்கு மலையாள மனோரமா பத்திரிகை ஏற்பாடு செய்து இருந்தது.

## சாதனை லலிதா!

இன்று பெண்கள் கால் பதிக்காத, கை தொடாத துறைகளே இல்லை என்று சொல்லலாம்.

கார், லாரி, டிராக்டர், இரயில், விமானம், புல்டோசர் என்று எல்லா வாகனங்களையும் இயக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள்.

தனித்து நின்று பல நிறுவனங்களை திறம்பட நடத்தியும் வருகிறார்கள்.

இங்கே ஒரு சாதனைப் பெண் ஆம்புலன்ஸ் வண்டியை ஓட்டுகிறார்.

அவர் பெயர் லலிதா சாந்தகுமார்.

சென்னை, கீழ்ப்பாக்கம், கே.ஜி.காலனி என்ற முகவரியில் இருந்து உயிர் பிரியும் நிலையில் உள்ளவர்களின் உயிரைக் காக்கும் வகையிலும், அவர்கள் உயிர் வாழும் நேரத்தை சிறிது நீட்டிக்கும் வகையிலும் பாதுகாத்து ஆம்புலன்ஸின் துணையுடன் உதவி புரிவதில் சாதனை புரிந்து வருகிறார், இவர்.

சரி... இந்த ஆம்புலன்ஸ் லேடியின் சாதனைதான் என்ன...?

ஆம்புலன்ஸ், முதன்முதலாக இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அவசரகால ஊர்தியின்

இன்றைய தேவையும், சேவையும் பட்டி தொட்டி எல்லாம் பரவியிருக்கிறதுஎன்றால் மிகையல்ல.

மாரடைப்பு வரும்போது மடல் போட்டுவிட்டா வரும்...? அப்படி ஒருவருக்கு வந்தது... வீட்டிலுள்ள வர்கள் கலங்கினார்கள். வெளியில் விரைந்தார்கள். பின்னர் தனியார் மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் வந்தது.

வந்த வண்டி விரைந்தது. நோயாளியோடு சென்று ஒரு பெரிய தனியார் மருத்துவமனையின் முன்னே ஒலியை நிறுத்தி நிற்கவும் அங்கே பணி செய்பவர்கள் பரபரப் பானார்கள்.

மருத்துவர்கள் வந்தனர்... நோயாளியைச் சோதித்தனர். கலங்கிய கண்களுடன் மனைவியும், மற்றவர்களும் நிற்க...

ஒரு பெரும் தொகையைக் கூறி பணம் கட்ட வேண்டும் என்று சொன்ன மருத்துவரின் வார்த்தைகளைக் கேட்டு வந்தவர்களும், நோயாளியின் மனைவியும் மிரண்டு போனார்கள்.

'எங்களால் அவ்வளவு பணம் முடியாதே... இவரை அரசு மருத்துவமனைக்கே கொண்டு போய் விடுங்கள்... அங்கேயே அவரை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்...' என்றார்கள்.

நெஞ்சுவலியால் துடித்துக் கொண்டிருந்தார், கணவர். தாலியைக் கையில் பிடித்து அழுது கொண்டிருந்தார், மனைவி.

''எங்கள் மருத்துவமனை ஆம்புலன்ஸ் வண்டி வேறு எங்கும் வராது. நீங்க வேற எதையாவது பிடித்துப் போங்கள்...'' - மனிதப் பண்பே இல்லாது பதில் வந்தது.

அத்தோடு, வீட்டிலிருந்து நோயாளியைக் கொண்டு வந்ததற்காக ஒரு கணிசமான தொகையையும் பெற்றுக் கொண்டார்கள்.

நெஞ்சுவலியோடு துடித்துக் கொண்டிருந்தார் கணவர். அவரைப் பார்த்து பதைத்துக் கொண்டிருந்தார், மனைவி.

இந்த நிலையில் ஒருவர் தனியார் ஆம்புலன்ஸ் வண்டியின் தொலைபேசி எண்ணைக் கொடுக்க, அடுத்த பத்தாவது நிமிடத்தில் அந்தத் தனியார் ஆம்புலன்ஸ் வண்டி வந்து நின்றது.

அந்த ஆம்புலன்ஸ் வண்டியிலேயே நோயாளிக்கு வேண்டிய உயிர்காக்கும் கருவிகளும், பணிப்பெண்ணும், ஆட்களும் இருந்ததால் பிரச்சனை இல்லாமல் அவரைக் கொண்டுபோய் அரசு மருத்துவமனையிலே சேர்த்தார்கள்.

தக்க சமயத்தில் ஒரு குடும்பத் தலைவரை தற்காலிக மாக பிழைக்க வைத்த நிறைவுடன் அந்தத் தனியார் ஆம்புலன்ஸ் வண்டி திரும்பிச் சென்றது.

அப்படித் திரும்பிச் சென்ற ஆம்புலன்ஸ் வண்டி இந்த லலிதா லேடியினுடையதே...!

இப்படி இவர் உயிர் காத்த நிகழ்ச்சிகள் இந்தியா முழுவதும் உண்டு.

இப்படிப்பட்ட உயிர்காக்கும் கருவிகளை தன்னுள் ளேயே வைத்திருக்கும் அந்த ஆம்புலன்ஸை தனியே இருந்து ஏழை எளியோர் மற்றும் மத்திய வர்க்கத்தினருக்கு உதவும் வகையில் ஒரு பெண்ணே முன் நின்று நடத்தி வருகிறார் என்பதுதான் இங்கே சாதனையாகக் கருதப் படுகிறது.

இப்படி வடிவமைத்துள்ள இவரது ஆம்புலன்ஸ் வண்டியில் ட்ராலி, ஸ்ட்ரெச்சர், ஆக்சிஜன் சிலிண்டர்கள் இரண்டு, பல்ஸ் ஆக்ஸி மீட்டர், சளி உறிஞ்சும் சக்சன் கருவி, மூச்சு விடுவதைச் சீராக்கும் வெண்டிலேட்டர், மூச்சுவிட உதவும் ஆம்பு கருவி, திடீரென நோயாளிக்கு மாரடைப்பு வந்தால் ஷாக் ட்ரீட்மெண்ட் தர டிபுரோட்டர் கருவி, வீல் சேர் ஆகியவை உள்ளன. ஒவ்வொன்றும் பல இலட்சம் விலை கொண்டது.

ஆண்களே செய்ய யோசிக்கும் இந்தத் தொழிலை நடத்த சாதனைப் பெண் இவருக்கு எது தூண்டுகோலாக அமைந்தது? எப்படி 'பிளையிங் ஸ்குவாடு ஆம்புலன்ஸ் சர்வீஸ்' உருவானது என்று கேட்க -

அவரே சொல்கிறார்...

*''செயல்திறன் மிக்கவர்கள் பெண்கள். எனக்குத் திருமணமாகி குடும்பத்தலைவியாகவே இருந்து வந்தேன். என் கணவர் 'ஃபிரீசர் பாக்ஸ்' பொருத்திய பெட்டிகளோடு ஆம்புலன்ஸ்களை அனுப்பும் தொழிலில் இருபது ஆண்டுகளாக இருந்து வருகிறார்.*

*(ஃபிரீசர் பாக்ஸ் என்பது நடிகர் திலகம் மறைந்தபோது அவரது பொன்னுடலை மூன்று நாட்கள் கெட்டுவிடாமல் பாதுகாத்ததே - இவரது கணவர் சாந்தகுமார் புதிதாகக் கண்டுபிடித்த நவீன கருவியே அது.)*

*அவ்வப்போது வீட்டு வேலைகளை முடித்துவிட்டு என் கணவரின் தொழிலுக்கு உதவுவேன். அப்படி உதவும் வேளையில், இறுதி ஊர்வலத்திற்கு உடலை எடுத்துச் செல்லும் எங்கள் ஆம்புலன்ஸ் வண்டி ஓட்டுநர்கள் திரும்பி வந்ததும், ஒவ்வொருவரிடமும் அவர்கள் ஏற்றிக் கொண்டு சென்ற நபர்களைப் பற்றி கேட்டறிவேன்.*

*குறிப்பாக, அவர் எப்படி இறந்தார்...? என்பதைக் கேட்டு புள்ளி விவரங்களைப் பத்தாண்டுகளாக சேகரிக்கத் தொடங்கினேன்.*

*அப்போது அதிர்ச்சியான ஓர் உண்மை ஒன்றை உணர்ந்தேன்... மரணம் அடைந்தவர்களில் பெரும் பாலானவர்களுக்கு கடைசி நேரத்தில் உயிர் காக்கும் கருவிகள் மட்டும் அந்த ஆம்புலன்ஸ்களில் இருந் திருந்தால் அவர்கள் இன்னும் சிறிது நேரம் உயிரோடு இருந்து, தன் கடைசி விருப்பங்களைச் சொல்லி யிருக்கலாம்... இன்னும் சிறிது காலம் இம்மண்ணில் வாழ்ந்திருப்பார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.*

*ஆம்புலன்ஸ் என்றாலே நோயாளிகளை மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்லும் வாகனம்தான் என்ற எண்ணத்தை மாற்ற விரும்பினேன்.*

*அதன்படியே உயிர்காக்கும் கருவிகளைக் கொண்ட ஆம்புலன்ஸை, நானும் என் கணவரும் வடிவமைத்தோம். இதை நானே முன்நின்று நடத்தவும் எண்ணினேன். அதன்படி தற்போது நடத்தியும் வருகிறேன்...''* என்றார், சாதனைப்பெண் லலிதா சாந்தகுமார்.

இன்று இவரது சேவை இந்தியா முழுதும் சென்றடைந்து வருகிறது.

இந்த சாதனைப்பெண், முதுகலைப்பட்டதாரி. ஆம்புலன்ஸ் வண்டியை இயக்கும் ஓட்டுநர் வேலைக்கு வராதபோது, இவரே ஆம்புலன்ஸை இயக்கவும் செய்வார் என்பது கூடுதலான செய்தியாகும்.

இந்தியாவில் ஆம்புலன்ஸ் சேவையில் முதல் சாதனைப்பெண் இவரே...!

## பெரிய காலணி!

ஜப்பான் நாட்டின் தலைநகரம் டோக்கியோ. இங்கே உள்ள சென்சோகி கோவில் முன்பு ஒரு ஜோடி இராட்சத செருப்பு உண்டு.

பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இதை மாற்றி புதிய செருப்பை அங்கே வைப்பார்கள்.

இந்த ஆண்டு புதிய ஜோடி செருப்பு தயாரித்து வைக்கப் பட்டது. வைக்கோலில் செய்யப்பட்ட இந்த செருப்பு களின் எடை மட்டும் 500 கிலோ. உயரம் 4.5 மீட்டர்.

ஜப்பான் இளைஞர்கள் 20 பேர் இதை தூக்க முடியாமல் தூக்கி வந்து ஆலயம் முன்பு வைத்தார்கள்.

## 440 கிலோ பூசணி

முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது என்பார்களே... ஜப்பான் விவசாயி ஒருவர் உருவாக்கி யிருக்கும் பூசணிக்காயை பார்த்தால் அதை வைக்கோல் போரில் போட்டு கூட மறைக்க முடியாது...

அவ்வளவு பெரிய இராட்சத பூசணிக்காயை உலக அளவில் உருவாக்கி உள்ளார் விவசாயி.

பூசணிக்காயின் எடை 440 கிலோ. இந்தப் பூசணிக்காய் ஜப்பானில் உள்ள அசிப்பெட்சு நகரத்தில் விளைந்து இருக்கிறது.

உலகிலேயே மிகப் பெரிய இந்த அதிசய பூசணிக்காய் கின்னஸில் இடம் பிடித்தகு.

## அடேங்கப்பா...

உலகிலேயே மிகவும் வயதான பெண் கென்யாவில் வாழ்கிறார்.

''நவோமி காகுவி முவாம்பா'' என்ற அவருக்கு தற்போது 125 வயது ஆகிறது.

கென்யாவின் தெற்கு பகுதியில் உள்ள 'வோட்' என்ற கிராமத்தில் வசித்துவரும் இவர் 1873-ஆம் ஆண்டு பிறந்தார்.

ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் இது குறிப்பிடப் பட்டுள்ளது.

நவோமிக்கு 1892-ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. அவர் ஒரு பணக்காரரின் 3-வது மனைவியாகி 1894-ஆம் ஆண்டில் முதல் குழந்தையை பெற்றார்.

அவரது 2-வது மகனுக்கு தற்போது 101 வயது ஆகிறது. நவோமிக்கு மொத்தம் 8 குழந்தைகள் பிறந்தன.

அவரது குடும்பத்தில் தற்போது 4 தலைமுறையை சேர்ந்தவர்கள் உள்ளனர். 48 பேரக் குழந்தைகள். 179 கொள்ளு பேரப் பிள்ளைகள், 48 எள்ளுப் பேரப் பிள்ளைகள் ஆகியோர் உள்ளனர்.

## குறள் யசோதா!

இரண்டாம் வகுப்பு படிக்கும் போதே திருப் பாவையின் 30 பாடல்களும் மனப்பாடமாகிவிட சிறுமி யசோதாவுக்கு பள்ளி முழுக்க பாராட்டு.

இவளின் பள்ளி ஆசிரியை சாந்தி. 'உனக்கு மனப் பாடம் நன்றாக வருகிறது. நீ ஏன் திருக்குறளை மனப் பாடம் செய்ய முயற்சிக்கக் கூடாது' என்று கேட்க.

'ஓ... பண்றேனே டீச்சர்' என்றாள், யசோதா.

நான்காம் வகுப்பில் ஆரம்பித்த திருக்குறள் மனனம் தொடர்ந்தது.

6-ஆம் வகுப்பு படிக்கும்போது யசோதா 1330 திருக்குறளில் இருந்து எப்படிக் கேட்டாலும் சொல்லும் மாணவியானாள்.

உதடுகள் ஒட்டாத பாடல்கள், அதிகமாக உதடுகள் ஒட்டும் பாடல்கள், விலங்குகள், பறவைகள், பூமரம், காய் மற்றும் இறைவனை குறிக்கும் பாடல்கள் என்று எதில் இருந்து கேட்டாலும் அதற்கான திருக்குறள் யசோதாவின் நாவில் இருந்து ஓடி வருகிறது.

எட்டாவது படிக்கும் வேளையில் பல மேடைகளில் திருக்குறளுக்கான பரிசுகளை வாங்கியிருக்கிறார்.

குறள்களைப் படிக்கும்போது ஏதாவது இடர்பாடுகள் ஏற்பட்டதா...?

சாதனை படைக்கும் அவரே சொல்கிறார்...

***''முதல் 60 அதிகாரம் படிச்சு முடிக்கறப்ப என்னால் முடியவில்லை என்று அப்பாகிட்ட சொல்லி அழுதேன். அப்பாதான் உன்னால் முடியும், நானிருக்கேன். இதை கஷ்டம்னு ஒரு போதும் நினைக்காதேன்னு சொல்லி ஊக்கம் தந்தார். பிறகு எனக்கு எதுவுமே கஷ்டமாக இல்லை.''***

இதுவரை 7 அமைப்புகளில் இருந்து பாராட்டுகளும் சான்றிதழ்களும் பெற்றிருக்கும் யசோதா சாத்தூரில் நடந்த ஒரு மணி நேரத்துக்குள் 1330 திருக்குறளையும் சொல்லும் போட்டியில் 55 நிமிடங்களிலேயே சொல்லி சாதனைப் படைத்து அனைவரையும் அசத்தினார்.

யசோதாவுக்கு அருப்புக்கோட்டை பெரிய புளியம் பட்டிதான் சொந்த ஊர். அங்குள்ள சாலியர் மகாஜன பள்ளியில்தான் படிக்கிறார்.

இந்த சாதனைப் பெண்ணின் தந்தை பெயர் வி.ஜி. தாமோதரக் கண்ணன்.

## 12 நொடியில் 50 மைல்!

இங்கிலாந்தை சேர்ந்த 'மேனுபேக்சரர் இன்டெலி ஜண்ட் எனர்ஜி' என்ற நிறுவனம் ஹைட்ரஜன் வாயுவில் இயங்கும் உலகின் முதல் மோட்டார் சைக்கிளை தயாரித்து சாதனை புரிந்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள் 12 நொடிக்கு 50 மைல் வேகத்தில் செல்லும் திறம் கொண்டதாம்.

மேலும் மோட்டார் சைக்கிள் செல்லும்போது சிறிதளவு கூட சத்தம் வெளிவராதாம். இது ஆபத்து என்பதால் செயற்கையாக மெல்லிய சத்தத்தை இணைக்க முடிவு செய்துள்ளனர்.

இது தவிர சிறிதளவு கூட புகையும் வெளி வராதாம். இந்த புதிய மோட்டார் சைக்கிள் மிகப்பெரிய அளவில் வியாபார வெற்றி பெறும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நம் ஊர் வீராங்கனை!

செஸ் போட்டியில் யாருமே எதிர்பார்க்காத வகையில் ஆசிய ஜூனியர் மகளிர் போட்டியில் 'சாம்பியன்' பட்டத்தை வென்று எல்லோரது பார்வை யையும் தன் பக்கம் இழுத்து இருப்பவர் மதுரை மாணவி கஸ்தூரி.

14 வயதான இந்த வீராங்கனை ஈரான் தலைநகர் டெக்ரானில் (2001) நடந்த ஆசிய ஜுனியர் மகளிர் (18 வயதுக்குட்பட்டோர்) செஸ் போட்டியில் கலந்து கொண்டார்.

இந்த போட்டியில் 6 நாடுகளைச் சேர்ந்த 16 வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இதில் 11 சுற்றுகளில் விளையாடிய கஸ்தூரி 8.5 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தைப் பெற்றார்.

இதற்கு முன்பு மாநில அளவில் நடந்த போட்டிகளில் 3 முறை 100 சதவிகிதம் புள்ளிகள் பெற்று கஸ்தூரி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இவர் முதன் முதலில் கலந்து கொண்ட சர்வ தேச போட்டி இதுவே. கலந்து கொண்ட முதல் போட்டி யிலேயே சாம்பியன் பட்டம் பெற்று இருக்கும் இந்த இளம் வயது சாம்பியன் மீது எல்லோர் பார்வையும் பதிந்தது.

இவரது வெற்றிச் சாதனை இந்தியாவிற்கு குறிப்பாக தமிழகத்திற்கு பெருமையானது.

கஸ்தூரி மதுரை டால்பின் பள்ளியில் 10-வது வகுப்பு படித்து வருகிறார். இவரது தந்தை முத்துக்குமரன் பேராசிரியராகவும். தாய் திலகவதி பள்ளியாசிரியை யாகவும் பணியாற்றி வருகிறார்கள்.

## நம்ம யானை!

உசேன், வலுவானவர். கூடுதல் பருமன் உடையவர். எவ்வளவு பெற்றாலும் தளராதவர். இவர்தான் அந்த பிரமாண்டமான மையத்தின் கதாநாயகர். இவரைக் கண்டாலே முதலில் பெண்கள் ஓடத் தொடங்குவார்கள்.

இந்தியாவில் இருந்து 1987-இல் சென்றவர். இப்போது சாதனை வீரராக தலைநிமிர்ந்து வலம் வருகிறார். முன்பு ஒதுங்கிச் சென்ற பெண்கள் இப்போது உரசிக் கொண்டு நிற்கிறார்கள்.

ஆம். இவர் இப்போது 5 பேரை கர்ப்பமாக்கி இருக்கிறார். விரைவில் அவர்கள் பிரசவம் நடக்க உள்ளது.

இப்படி 20 வயதே உள்ள இந்த உசேன் உலக சாதனை படைக்கப் போவது உறுதியாகிவிட்டது.

இவரால் இன்னும் பலரை கருதரிக்க செய்ய முடியும். இதன் மூலம் உலக சாதனை இவருக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கும்தான்.

சரி இனியும் சஸ்பென்ஸ் தேவையா என்ன? உசேன் வேறு யாருமல்ல. சூப்பர் யானை.

ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் உள்ள ஹெகன்பெக் வனவிலங்கு சரணாலயத்தைத் தனியார் நடத்துகின்றனர். இங்குள்ள யானைகள் 14. இதில் இரண்டு மட்டுமே ஆண். 12 பெண் யானைகள். பெரும்பாலானவை இந்திய யானைகள்.

உசேன் இங்கே வந்த புதிதில் பெண் யானைகள் ஒதுங்கி ஓடுமாம். உசேனின் பொறுமை பலரை கவர்ந்தது.

விளைவு 5 பெண் யானைகளுக்கு விரைவில் பிரசவம் நடக்க உள்ளது. இன்னும் 6 யானைகள் உசேனுக்காக காத்திருக்கின்றனவாம்.

பொதுவாக பெண் யானைகளிடம் நெருக்கம் கிடைக்க வில்லையானால் பாகனை ஆண் யானை கொன்றுவிடும். உசேன் வித்தியாசமானது. எப்போதும் அமைதிதான்.

இப்போது உசேனுக்கு 20 வயதுதான் ஆகிறது.

இதற்கு முன்பு பிரான்சில் 50 வயதான யானை 11 குட்டிப் போட காரணமாக இருந்தது. இதுதான் உலகில் நெம்பர் ஒன்.

உசேன் விரைவில் இந்த சாதனையை முறியடித்து விடும் என்கிறார், ஹெகன்பெக் மைய நிபுணர் கார்லகாக்.

## திருமணச் செலவு 250 கோடி!

ஆயிரங்களில் நடக்கும் திருமணத்தைப் பார்த்து இருப்பீர்கள். இலட்சங்களில் நடக்கும் திருமணங்களைப் பார்த்திருப்பீர்கள். கோடியில் நடக்கும் நடந்ததை தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள்.

பல நூறு கோடிகளில் நடந்த திருமணத்தை கேள்விப் பட்டிருக்கிறீர்களா..? கடந்த 2004-ஆம் ஆண்டு உத்திரப் பிரதேசம் மாநிலம் லக்னோவை கலக்கியது என்பதோடு உலகையே ஒரு நிமிடம் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது இந்தத் திருமணம். அதுதான் சஹாரா நிறுவனங்களின் அதிபர் சுப்ரதா ராய் வீட்டு திருமணங்கள்.

இந்த திருமணங்களில் சில....

ஒரு வாரம் நடந்த இந்தத் திருமணங்கள் லக்னோவையே ஸ்தம்பிக்க வைத்தது.

சஹாரா மகன்கள் சுசன்டோ, சிமன்டோ திருமணங்கள் சஹாரா சாஹர் மாளிகையில் நடந்தது.

மொத்த செலவு 250 கோடி ரூபாயாம். வாஜ்பாய், அத்வானி என்று வி.ஜ.பி.கள் கட்சி வேறுபாடின்றி குவிந்தனர். அப்படியே சினிமா நடிகர் நடிகைகளும் குவிந்தனர்.

டில்லியில் இருந்து லக்னோ, மும்பையில் இருந்து லக்னோவுக்கு பறந்தன தனி விமானங்கள். விமான நிலையத்தில் இருந்து திருமண மண்டபம் அருகே அமைக்கப்பட்டிருந்த ஹெலிபேட்டுக்கு ஹெலி காப்டர்கள் விவிஐபி-க்களை அழைத்து வந்தன.

நூற்றுக்கணக்கான மெர்சிடிஸ்கார்கள், நூற்றுக் கணக்கான லிமோசின் கார்கள், எங்கும் கார்கள்.... கார்கள்...

திருமணம் நடந்த இடம் 200 ஏக்கர் பரப்பளவு உள்ள பிரமாண்டமான பகுதி.

செயற்கை ஏரி உருவாக்கப்பட்டிருந்தது. அதற்கு பல வண்ண விளக்குகளாக 45 ஆயிரம் பல்வேறு வடிவ மெழுகுவர்த்திகள், ஆங்காங்கு பிரமாண்ட உருவத்தில் ஒளி வீசி காட்சியளித்தன.

பெண்கள், விலங்குகள், பிராணிகள், பறவைகள் என்று பல்வேறு உருவங்களில் இந்த மெழுகுவர்த்திகள் இரவை பகலாக்கியதோடு வர்ணஜாலங்கள் காட்டின.

எங்கும் பல வண்ண பூக்களின் மயம்தான். இதற்காக 500 பூவேலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அலங் கரிக்கப்பட்டிருந்தன.

மாப்பிள்ளை அழைப்பின்போது கார் ஓட்டினார், இந்தியாவின் நெம்பர் ஒன் மொபைல் நிறுவனர் அம்பானி. உடன் உலக அழகி ஐஸ்வர்யாராய், அமிதாப் பச்சன் வந்தனர்.

இந்த உலக மகா திருமணங்கள் நடந்த அதேசமயம். நாடு முழுக்க 1 இலட்சத்து 40 ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சஹாரா நிறுவனம் சார்பில் 101 ஏழைகளுக்கு திருமணங்கள், அதுவும் தலா ஒரு இலட்சத்து ஒரு ரூபாய் செலவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த உலக சாதனை திருமணத்தைப் பற்றி, பிபிசி சேனல், இலண்டன் டெலிகிராப் பத்திரிகை, அமெரிக்க ஹெரால்டு டிரிபியூன் என்று உலக மகா டிவிக்கள், பத்திரிகைகள் கூட செய்திகளை வெளியிட்டிருந்தன.

நம் தமிழ்நாட்டில் கூட நூறு கோடி ரூபாயில் ஒரு திருமணம் நடந்து, தமிழகத்தில் சாதனை புரிந்தது.

இந்த திருமணமோ இந்தியாவிலேயே நடந்த திருமணங்களில் முதன்மை பெற்று சாதனை படைத்துள்ளது.

## கில்லாடியின் சாதனை!

பஸ்ஸில், இரயிலில், கப்பலில் எல்லாம் பயணச் சீட்டை வாங்காமல் பயணம் செய்து சாதனை படைத்த ஒருவர், விமானத்திலும் அதே முறையில் பயணம் செய்து சாதனை படைக்க நினைத்தார்.

அதனால், விமான இறக்கையை பிடித்துக் கொண்டு 9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் யாருக்கும் தெரியாமல் ஓசிப் பயணம் செய்திருக்கிறார்.

இந்த சாதனை நடந்தது 1968-இல் கியூபாவிலிருந்து ஸ்பெயினுக்கு பறந்து சாதனை படைத்த அவர் பெயர் சாக்ரஸ்.

## மீசையும் ஆசையும்!

எந்த ஆணிற்குத்தான் மீசை மீது ஆசை இருக்காது? எல்லோருக்கும் இருக்கவே செய்யும். அதற்கென்று இப்படியா...?

மத்தியப் பிரதேச மாநிலம், போபாலைச் சேர்ந்தவர் கப்நாத்சிங் பரிஹார். இவர் சுமார் 1 மீட்டர் நீள மீசையை வளர்த்து சாதனை புரிந்துள்ளார்.

இவர் தனது மீசையை தினமும் ஷாம்பு மற்றும் எண்ணெய் போட்டு சுத்தம் செய்கிறாராம்.

## நோபல் பரிசு பெற்ற தம்பதியினர்

**சு**வீடன் நாட்டில் ஆண்டுதோறும் குழந்தைத் தொழிலாளர்கள் நலனுக்காகப் பாடுபடும் அமைப்பிற்கு 'குழந்தைகள் உரிமைக்கான நோபல் பரிசு' உலக அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

அப்பரிசினை 2004 -ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள திண்டுக்கல் ''அமைதி அறக்கட்டளை' என்ற அரசு சாரா அமைப்பினை 22 ஆண்டுகளாக நடத்திவரும் தம்பதியினரான ஜே.பால்பாஸ்கரும், அவரது மனைவி மெர்சியும் சுவீடன் சென்று பெற்று இருக்கிறார்கள்.

சுவீடன் தலைநகர் ஸ்டாக் ஹோமில் நடந்த விழா ஒன்றில் சுவீடன் மகாராணி சில்வியா இவர்களுக்கு அந்த விருதை வழங்கியிருக்கிறார்.

கடந்த 22 ஆண்டுகளாக குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக சுவீடன் கூறியுள்ளது.

குழந்தைத் தொழிலாளர்கள் உரிமைக்கான 'நோபல் பரிசி'னை சுவீடன் நாட்டிலுள்ள 'குழந்தை உலகம்' என்ற நிறுவனம் ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. 2004-க்குரிய பரிசினை இவர்களுக்கு வழங்கி சிறப்பித்துள்ளது.

இந்த அமைப்பிற்கு 35 நாடுகளில் கிளைகள் உள்ளன. தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா, சுவீடன் பிரதமர் கோர்டன் பெர்சன், கிழக்கு திமோர் ஜனாதிபதி கசாமோ, நோபல் பரிசு பெற்ற அறிஞர் ஜோசப் ஆகியோர் நடுவர் குழுவினராக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த ஜே.பால்பாஸ்கர் சென்னை இலயோலா கல்லூரியிலும், காந்தி கிராமம் பல்கலைக் கழகத்திலும் படித்தவர். எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட் பட்டம் பெற்றவர்.

1984 முதல் சுற்றுச்சூழல், குழந்தைத் தொழிலாளர் உரிமைக்கான தன்னார்வ அமைப்பான 'அமைதி அறக் கட்டளை'யின் தலைவராக உள்ளார். திண்டுக்கல், கரூர், கோவை, சிவகங்கை மாவட்டங்களிலும் சென்னைப் பெருநகரிலும் களப்பணி ஆற்றுகிறார்.

1989-இல் இவர் நிறுவிய 'சுற்றுச்சூழல் புதிய கல்வி' மாத இதழ் தொடர்ந்து வெளிவருகிறது.

குடிபெயர் தொழிலாளர்களுக்காக 'கடல் கடந்த தொழிலாளி' என்ற காலாண்டு இதழையும்வெளியிட்டு வருகிறார்.

2001-இல் தமிழில் முதல் சுற்றுச்சூழல் தகவல் களுக்கான இணையதளமான www.pasumaiulagam.com-ஐ தொடங்கி நடத்தி வருகிறார்.

2004 நவம்பர் முதல் www.pasumaiulagamradio.com என்ற இணைய தள வானொலியைத் தொடங்கி உலகெங்கு முள்ள தமிழர்களுக்கு வழங்கி வருகிறார்.

மனித உரிமை, குழந்தைத் தொழிலாளர், சுற்றுச் சூழல், சர்வதேச வர்த்தகம், விவசாயம், கொத்தடிமைத்

தொழிலாளர்கள், கடல் கடந்த தமிழ்த் தொழிலாளர்கள் குறித்த பல சர்வதேசக் கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ள தோடு, பேசியுமுள்ளார்.

உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு போன்றவற்றின் பல முக்கிய ஆலோசனைக் கூட்டங்களில் பல்வேறு நாடுகளில் பங்கேற்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சமூகப் பொருளாதார கவுன்சிலின் ஆலோசனைக்குழுவில் உறுப்பினராகவும், இந்திய அரசின் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் தமிழக கடலோர மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். பரவலாக உலகெங்கும் பயணம் செய்பவர் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

சிறந்த நூலாசிரியருக்கான தமிழக அரசின் விருது 'FRIENDS OF UNITED NATIONS'-ன் பாராட்டுப் பத்திரம், பொருளாதார, மனித உரிமைக்கான ஃபியான் விருது, இலண்டன் பாடி ஷாப் வழங்கிய ரொக்கப் பரிசுடன் கூடிய சர்வதேச மனித உரிமை விருது மற்றும் குழந்தைகள் நோபல் பரிசு என்று அழைக்கப்படும் சுவீடன் நாட்டு அரசியார் வழங்கிய உலகக் குழந்தைகள் விருது போன்றவை இவரது பணிக்கான அங்கீகாரங்கள்.

## மிகவும் வயதான...

கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்தவர் டாக்டர் கே.மணி (89). பல் டாக்டராகப் பணியாற்றி வரும் இவர்தான் உலகிலேயே மிகவும் வயதான தொழில்புரியும் பல் டாக்டர் ஆவார்.

எனவே இவர் பெயர் கின்னஸ் சாதனையாளர்கள் வரிசையில் இடம் பெற்றுள்ளது.

பத்து வயதிலேயே தனது பெற்றோர்களை இழந்து விட்ட டாக்டர் மணி, உறவினர்களின் உதவியால் படித்து முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரத்தாய்...!

**கா**மரூன் நாட்டு தலைநகர் யாவுண்டே அருகிலுள்ள அகோன்ர என்ற ஊரைச் சேர்ந்தவர் ஆனிஓயா (52) என்ற பெண்.

18 குழந்தைகளை பெற்றுள்ள இவர் காமரூன் நாட்டின் 2000-ஆவது ஆண்டின் வீரத்தாயாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

இவர் பெற்ற 18 குழந்தைகளை, கணவர் இறந்த பிறகு, தானே விவசாய வேலை செய்து காப்பாற்றி வருகிறார்.

இதற்கிடையில் 2000-ஆவது ஆண்டிற்கான வீரத்தாய் போட்டி நடந்தது.

அப்போட்டியில் கலந்து கொண்ட 200 பெண்களில் இவரே சாதனைப் பெண்ணாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசையும் பெற்றார்.

## சைக்கிள் பா(ர்)ட்டி!

**மெ**க்சிகோவைச் சேர்ந்தவர் கார்மென் அலிசியா மியூனிஸ் (62) என்ற மூதாட்டி.

முன்னாள் சைக்கிள் வீராங்கனையான அவர் 1950, 60, 70 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை போட்டிகளில் பங்குபெற்றவர்.

அவர் சமீபத்தில் தொடர்ந்து 26 மணி நேரம் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார்.

மணிக்கு 26 கிலோ மீட்டர் வேகத்தில் சென்ற அவர் இதன் மூலம் தனது முந்தைய சாதனையை தானே முறியடித்து உள்ளார்.

இவரது முந்தைய சாதனை கின்னஸ் சாதனை வரிசையில் இடம் பெற்றுள்ளது.

## பிறந்த நாள்...

சிரியா நாட்டின் அதிபராக இருப்பவர் ஆசாத்.

அவரது பிறந்த நாள் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது.

ஆசாத் பிறந்த நாளையொட்டி சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கசில் ராட்சத கேக் ஒன்றை உருவாக்கி னார்கள்.

இந்த பெரிய கேக்கின் எடை 950 கிலோ. உயரம் 4.60 மீட்டர். கேக்கின் அடிப்பகுதி மட்டும் 2 மீட்டருக்கு 2 மீட்டர் சுற்றளவு இருந்தது.

கேக்கின் உச்சியில் ஆசாத்தின் உருவமும், அதைச் சுற்றி தேவதூதர்களின் பொம்மைகளும் இடம் பெற்றிருந்தன.

ஒருவரின் பிறந்த நாள் கேக் இந்த அளவில் பெரிதாக அமைந்தது இதுதான் முதல் முறையாகும்.

## பெரிய கொடி!

இத்தாலி நாட்டின் தேசியக் கொடியில் பச்சை, வெள்ளை, சிவப்பு நிறங்கள் இருக்கும். பார்வைக்கு இந்திய தேசியக் கொடியைப் போலவே இருக்கும்.

ஆனால், இத்தாலிய கொடியில் படுக்கை வசமாக இந்த நிறங்கள் இருப்பதற்குப் பதிலாக செங்குத்து வரிசையில் இந்த மூன்று நிறங்களும் அமைந்திருக்கும்.

இத்தாலியின் இந்த மூவர்ண தேசியக்கொடிக்கு தற்போது 200 வயதாகிறது.

அதையொட்டி ராட்சத கொடியொன்றை உருவாக்கி, அதை உலக சாதனை புத்தகத்திலும் இடம் பெற வைத்துவிட்டனர், இத்தாலியர்கள்.

1500 மீட்டர் நீளத்தில் 6 மீட்டர் அகலத்தில் 3000 பேர் சேர்ந்து இந்தக் கொடியை விரித்துக் காட்டினார்கள்.

ரோம் நகரில் உள்ள கொலேசியம் பகுதியில் இருந்து வெனிஸ் பிளாசா பகுதி வரை கொடி நீண்டது.

இத்தாலிய தேசியக்கொடி ஆரம்பத்தில் அந்த நாட்டின் வடக்குப் பகுதியில் கொடியாக இருந்தது.

1861-இல் இத்தாலி நாடு ஒன்றுபட்டபோது இந்தக் கொடி தேசியக்கொடியாக மாறியது.

## நான்கு சக்கர சைக்கிள்!

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆலன் சூலட் என்பவர், அவரது மனைவி சில்வி, 4 வயது மகன் அமெரிக் உலிசி ஆகியோருடன் சைக்கிளில் உலகப்பயணம் செய்து வருகிறார்.

ஆஸ்திரேலியாவில் தொடங்கிய இந்தப் பயணம் தற்போது இந்தியாவில் நடந்து வருகிறது.

இதற்கென 4 சக்கரம் கொண்ட நீளமான ஒரு சைக்கிளை இந்த தம்பதிகள் பயன்படுத்துகிறார்கள்.

4 ஆண்டுகளில் சுமார் 50 ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்ய இவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதே போல் -

நாள் ஒன்றுக்கு 60 கிலோ மீட்டர் தூரம் இவர்களின் பயணம் நடைபெற்று 2001-ஆம் ஆண்டில் வேறொருவர் சாதனையை முறியடித்தது.

## பெரிய பலூன்

ஹைட்ரஜன் வாயு அடைத்த ராட்சத பலூனில் பறந்து உலக சாதனை புரிய உலகத்தைச் சுற்றும் ஆவல் பலருக்கு உள்ளது.

அந்த ஆவலால் தற்போது இங்கிலாந்து சாகச வீரர் ஒருவர் பலூனில் உலகப் பயணம் கிளம்பியுள்ளார்.

இவரது பெயர் ரிச்சர்டு பிரான்சன். இவருக்குத் தொழில் போட்டியாளரான அமெரிக்காவின் ஸ்டீவ் பாசட், சுவீடன் நாட்டைச் சேர்ந்த லிண்டர்ஸ்டாண்டு ஆகிய இரண்டு பேருடன் தனது பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

இவர்கள் பயணம் செய்த பலூன் பொராக்கோ நாட்டில் உள்ள மராகேஷ் நகரத்தில் இருந்து புறப்பட்டு இருக்கிறது.

## நீண்ட நகம்!

உலகிலேயே மிக நீளமான நகம் வளர்த்து கின்னஸ் சாதனை படைத்தவர் ஸ்ரீதர் மால்காஜி சிலால்.

61 வயதான இவர் மராட்டிய மாநிலம் பூனேயைச் சேர்ந்தவர். தனது 10 ஆவது வயது முதல் இடது கை விரல்களில் உள்ள நகங்களை வெட்டாமல் வளர்த்து

வருகிறார். இந்த நகங்கள் சுமார் 20 அடி நீளம் உள்ளன.

நீளமாக நகம் வளர்ப்பதில் 1980-ஆம் ஆண்டில் இருந்து இவர் கின்னஸ் சாதனை படைத்து வருகிறார்.

தற்போது இவர் தனது நகங்களை ஏலத்தின் மூலம் விற்கத் திட்டமிட்டு இருக்கிறார்.

இதற்காக பாங்காக்கில் ஒரு நிறுவனத்துடன் அவர் ஒப்பந்தம் செய்துள்ளார். அவரது நகம் மற்றும் சாதனை விவரங்கள் கம்ப்யூட்டரில் தொகுக்கப்பட்டு, இன்டர்நெட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இன்டர்நெட்டின் மூலம் இந்த நகங்களை ஏலம் எடுக்கலாம்.

ஆரம்ப விலை சுமார் 10 இலட்சம். சிலால் இதுபற்றி கூறும்போது, *''நகம் வளர்க்க ஆரம்பித்ததில் இருந்து நிம்மதியான தூக்கம் போய்விட்டது.*

*தூங்கும்போது புரண்டு படுத்தால் எங்கே நகம் உடைந்து விடுமோ என்ற பயம் உள்ளதால் ஆழ்ந்து உறங்க முடியவில்லை.*

*அதோடு உடை மாற்றுவது, குளிப்பது மற்றும் வெளியிடங்களுக்குச் செல்வது போன்ற விசயங்களிலும் மிக கவனமாக செயல்பட வேண்டியுள்ளது.*

*சுதந்திரமாக செயல்பட முடியாத நிலை மற்றும் நகங்களின் எடை மற்றும் தோள் பகுதியில் கூடுதல் சுமையாகத் தெரிகிறது.*

*எனவேதான் அவற்றை எளிதில் விற்க முடிவு செய்தேன்''* என்கிறார், இந்தச் சாதனையாளர்.

## 30 அடி...

**நி**யூயார்க்கில் ஒரு குதிரை 30 அடி உயர மேடையில் இருந்து கீழே குதித்து சாதனை படைத்துள்ளது.

இந்தக் குதிரைக்குப் பயிற்சி அளித்தவர் டிரிம் ரிவர்ஸ். ''குதிரையை 30 அடி உயரத்திலிருந்து கீழே குதிக்க வைத்தால் உம்மை கைது செய்வோம்'' என்ற போலீஸ் மிரட்டலையும் மீறி, அவர் குதிரையை குதிக்க வைத்து சாதனை செய்திருக்கிறார்.

## மலை ஏறி...

இங்கிலாந்தின் பிரபலமான மலை ஏறும் வீரர் கிறிஸ்போனிங்டனுக்கு 64 வயது ஆகிறது.

இந்த வீரர் திபெத்திலுள்ள புனித சிகர உச்சியை எட்ட வேண்டும் என்பதை இலட்சியமாக கொண்டிருக்கிறார்.

1975-ஆம் ஆண்டில் எவரெஸ்டில் இங்கிலாந்து வீரர் ஏறினார்.

அதன் பிறகு திபெத் மலை உச்சிக்குச் செல்லும் முதல் வீரர் என்ற பெருமையை போனிங்டன் பெற்றுள்ளார்.

5 பேர் குழுவுடன் அவர் 7 ஆயிரத்து 600 மீட்டர் உயரத்தில் உள்ள செடி காங்ரி சிகரத்தில் ஏறுகிறார்.

இந்த சிகரம் திபெத்தின் தலைநகரம் ஹசாவில் இருந்து 320 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

## சோபா கார்...!

கிட்டத்தட்ட ஒரு பஸ்ஸின் உயரத்தில் முக்கால் வாசிக்கு மேலே இருக்கிறது சொகுசாக பயணம் செய்வதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள, ஒரு கார். பார்ப்பதற்கு ஒரு பெரிய சோபாவைப் போல் இருக்கிறது.

இந்தக் கார் சாலையில் ஓடும்போது ஒரு யானை வேகமாகச் செல்வது போல் காட்சியளிக்குமாம்.

'ஜூம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்தச் சாதனை கார் சமீபத்தில் ஜொகன்ஸ்பர்க் நகரில் நடந்த சர்வதேச கண்காட்சியில் இடம் பிடித்து பலரையும் வியக்கச் செய்தது.

## குழந்தையின் எடை...!

உலகில் மிகக் குறைந்த காலத்தில் 21 வாரங்கள், 3 நாட்கள் மட்டுமே ஆன குழந்தை துபாயில் பிறந்து உள்ளது.

இந்தக் குழந்தை 524 கிராம் எடையுடன் துபாய் முபாரக் மருத்துவமனையில் பிறந்து ஆரோக்கியமாக உள்ளது.

இது கின்னஸ் சாதனையாகும். இந்தக் குழந்தைக்கு டியூப் மூலம் தாய்ப்பால் இரத்த நாளங்களில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

இதற்கு முன் 1987-ஆம் ஆண்டு 22 வாரங்களில் பிறந்த குழந்தை தற்போதைய கின்னஸ் சாதனையாக உள்ளது.

இந்தச் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

## சாதனை மன்னன்!

தேனியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குச்சனூரைச் சேர்ந்தவர், வேல் முருகன் (29).

இவர் கடந்த 97-ஆம் ஆண்டு காவல்துறையில் காவலராகச் சேர்ந்தார். இப்போது கோவை ஆயுதப்படை பிரிவில் பணியாற்றி வருகிறார்.

இவருடைய தந்தை இராமய்யாவும் காவலர்தான். இப்போது பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

வேல்முருகனுக்கு சாதனை செய்து புகழைப் பெற வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம்.

அதுவும் உலக அளவில் சாதனை செய்ய வேண்டும் என்பதுதான் அவரது கொள்கை. முதலில் எண்பது அடி உயரத்திலிருந்து அரை அடி தண்ணீர் நிரம்பிய தொட்டிக்குள் நேராகக் குதித்து சாதனை படைத்துள்ளார்.

அடுத்து ஆறு கிலோ எடை கொண்ட 'தம்பிள்ஸ்' இரும்புக் குண்டை 24 மணி நேரம் தொடர்ந்து தூக்கி சாதனை புரிந்துள்ளார்.

லேயர் கேம்ப் முதல் வைகை வரை உள்ள ஆற்றின் தூரத்தை நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

இத்தனை சாதனைகளை புரிந்த வேல்முருகன் சென்னையில் கின்னஸ் சாதனை நிகழ்த்தினார்.

எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் ஒரு அடி தண்ணீர் நிரம்பிய தொட்டிக்குள் முப்பது அடி உயரத்தில் இருந்து தண்ணீரில் வயிறு படுவது போல குதித்து சாதனை புரிந்தார்.

தண்ணீர்த் தொட்டியில் தெர்மோகூல் வைக்கப்பட்டு, அதன் மேல் தண்ணீர் ஊற்றப்பட்டு இருந்தது.

இந்தத் தொட்டியில் பத்து விநாடிக்குள் குதித்து மெய்சிலிர்க்க வைத்தார்.

இதற்கு முன்பாக அமெரிக்காவைச் சேர்ந்த டோனி கிக்கின் பாதம்ஸ் என்பவர் 29 அடி ஒரு அங்குலம் உயரத்தில் இருந்து குதித்து உலக சாதனை படைத்திருந்தார்.

அந்தச் சாதனையை நம் நாட்டைச் சேர்ந்த வேல் முருகன் முறியடித்து உள்ளார்.

கின்னஸ் சாதனையை புரிந்த வேல்முருகனின் அடுத்த திட்டம் பற்றி அவர் கூறுகையில், *"ஹெலிகாப்டரில் 405*

*அடி உயரத்திலிருந்து நடுக் கடலில் குதித்து கின்னஸ் படைப்பதுதான்.*

*1936-ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி என்பவர் 386 அடி உயரத்திலிருந்து நடுக்கடலில் குதித்து சாதனை படைத்திருக்கிறார்.*

*அந்த சாதனையை முறியடித்து உலக சாதனை நிகழ்த்தப் போகிறேன்''* என்கிறார் வேல்முருகன்.

## குறள் மணிகள்!

சந்தன வீரப்பன் நடமாடிய மலைப்பகுதியின் அடிவார கிராமம் ராமபையலூர். மலைவாசிகள் வசிக்கும் பகுதி.

இந்த ஊரைச் சேர்ந்த முருகன், கண்ணம்மாள் ஆகியோரின் மகள் பரிமளம். வயது 13.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள புதுவடவள்ளியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் 8-ஆவது வகுப்பு படித்து வருகிறாள்.

இவளைபோலவே இதே பள்ளியில் 8-ஆம் வகுப்பில் படிக்கும் மற்றொரு மாணவி எஸ்.மைதிலி. வயது 13.

இவளுடைய தந்தை சின்னராஜ்-தங்கமணி புதுவட வள்ளியைச் சேர்ந்தவர்கள்.

பழங்குடி இனத்தைச் சேர்ந்த இந்த இரண்டு மாணவிகளும் 1330 திருக்குறள்களையும் மனப்பாடமாக ஒப்புவிக்கிறார்கள்.

133 அதிகாரங்களில் குறளின் முதல் வார்த்தையைக் கூறியவுடன், 'மடமட'வென ஒப்புவிக்கிறார்கள்.

எப்படி மாற்றிக் கேட்டாலும் சொல்கிறார்கள். மலைப்பகுதியில் வாழும் இவர்கள், எந்த வசதியும் இன்றி குறளின் மீது உள்ள ஆர்வத்தில், தமிழ்ப் பற்றுடன் குறள்களை ஒப்புவிப்பது ஆசிரியர்களுக்கு மட்டு மல்லாது, இப்பகுதி மக்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

மாணவி பரிமளம் சொல்வது...

***"கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா பற்றி செய்திகளை நான் கேட்டபோது, வள்ளுவரின் மகத்துவம் பற்றி புரிந்து கொண்டேன்.***

***எப்படியும் 1330 குறளையும் மனப்பாடம் செய்வது என்று முடிவுடன் பயிற்சியைத் தொடங்கினேன்.***

***இதுபற்றி என் தலைமை ஆசிரியர் சேகர் அவர்களிடம் கூறினேன். அவர் மேலும் என் ஆர்வத்தைத் தூண்டினார். சாதனை படைத்தேன்.***

***பொருளாதார உதவி மட்டும் எனக்குக் கிடைத்தால் மேலும் பல சாதனைகளை செய்வேன்"*** என்று கூறினாள்.

எஸ்.மைதிலி கூறும்போது...

***"நான் 1330 குறளையும் ஒப்புவிக்க என் அக்காவின் தூண்டுதல்தான் காரணம். தினமும் ஒரு குறள் வீதம் மனப்பாடம் செய்து ஒப்பிப்பேன். அதன் பிறகுதான் சாப்பிடுவேன்.***

***6 மாதத்தில் எல்லா குறளையும் எப்படி கேட்டாலும் கூறும் அளவுக்கு ஆற்றல் பெற்றேன்"*** என்கிறாள்.

# தும்மாதே...!

15 வயதில் தும்மல் போட ஆரம்பித்தவர், 52 வயது வரை விடாமல் தும்மல் போடுகிறார்.

இலண்டனைச் சேர்ந்த பாட்ரிக் வெப்ஸ்டர் கடந்த 37 ஆண்டுகளாக தும்மிக் கொண்டே இருந்தார். அவர் வேண்டுமென்றே தும்மல் போடவில்லை.

தானாகத்தான் தும்மல் வந்தது. ஒரு நாளைக்கு 100 தடவைகளுக்கு மேல் தும்மல் போட்டு வந்த அவர் தான் செய்துவந்த வேலையையும் இழக்க நேரிட்டது.

60 டாக்டர்களிடம் சென்று பார்த்தாகிவிட்டது. தும்மல் நின்ற பாடில்லை. கடைசியாக உணவுத்துறை நிபுணர்கள் அவரது தும்மலுக்கு காரணம் அலர்ஜி என்று கண்டுபிடித்தனர்.

அவர் தினமும் முட்டை மற்றும் ஓட்ஸ் சாப்பிடுவது வழக்கம். அதுவும் அவர் சாப்பிட பயன்படுத்தும் பாத்திரமும்தான் 'அலர்ஜி'-க்குக் காரணம் என்று அந்த நிபுணர்கள் கண்டுபிடித்தனர்.

அதை நிறுத்திக் கொண்டதும், அவருக்கு தும்மலும் நின்றுவிட்டது.

இத்தனை நாள் இதை கண்டுபிடிக்க முடியாமல் சிகிச்சை அளித்த டாக்டர்கள் மீது வெப்ஸ்டர் வழக்குத் தொடரப் போகிறாராம்.

60 இலட்சத்துக்கும் மேல் தும்மல் போட்டிருக்கும் இவரது சாதனையை...! இல்லை, வேதனையை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வைக்கவும் ஏற்பாடு நடக்கிறது.

## நாடகமொன்று நடக்குது...!

கர்நாடக மாநிலம் தாவண கெரேவில் உள்ளது கே.பி.ஆர். கம்பெனி என்ற நாடகக்குழு.

அதன் சார்பில் 'போலீஸ்காரன் மகள்' என்ற நாடகம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த நாடகம் 1995-ஆம் ஆண்டு அக்டோபர் 30-ஆம் தேதி முதன்முதலாக அரங்கேறியது.

இதுவரை 3,315 முறை மேடை ஏறி சாதனை புரிந்துள்ளது.

இந்த நாடகம் டெல்லி, வாரணாசி, ஐதராபாத் உள்பட பல்வேறு முக்கிய நகரங்களில் நடைபெற்றுள்ளது.

பெங்களூரில் மட்டும் இதுவரை 1,137 முறை நடைபெற்றுள்ளது.

இந்த நாடகத்தின் கதையில்... ஒரு போலீஸ்காரரின் மகள், அரசியல்வாதி ஒருவரின் மகனை காதலித்து திருமணம் செய்து கொள்கிறாள்.

அவன் ஒரு சமூக விரோதி. நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவன் என்பது பிறகு தெரிய வருகிறது.

அதை அறிந்த அவள் அவனைக் கணவன் என்றும் பார்க்காமல் கொலை செய்து விடுகிறாள்.

## தன்னந்தனியே!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர், ஜெஸ்சி மார்ட்டின். வயது 17.

இவர் தன்னந்தனியாக ஒரு படகில் உலகைச் சுற்றி வரும் சாதனை முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

அதற்காக அவர் மெல்போர்னில் இருந்து புறப் பட்டார்.

34 அடி நீளமுள்ள அந்தப் படகில் அவர் தன்னுடன் ஒரு கம்ப்யூட்டர், செயற்கைக்கோள் மூலம் செயல்படும் தொலைபேசி கருவி ஆகியவற்றை கொண்டு சென்று உள்ளார்.

மேலும் இந்த சாதனையாளர் படகில் சென்றபடியே தனது பள்ளிப் படிப்பைத் தொடரவும் தீர்மானித்து உள்ளார்.

50 ஆயிரம் மைல் தொலைவை அவர் 9 மாதங்களில் கடப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 12 ஆயிரம் திருமணம்!

தென்கொரியாவைச் சேர்ந்த சியோவில் உள்ளது சாம்சில் ஒலிம்பிக் விளையாட்டு மைதானம்.

இங்குதான் பிரமாண்டமான கூட்டு திருமணம் நடைபெற்றது. அதில் 12 ஆயிரம் ஜோடிகள் திருமணம் செய்து கொண்டனர்.

மேலும் 28 ஆயிரம் தம்பதிகள் தங்களது திருமண பந்தத்தை மீண்டும் உறுதிசெய்து கொண்டனர்.

இந்த சாதனை நிகழ்ச்சி 30 ஆயிரம் பேர் முன்னிலை யில் நடந்தது.

மணமக்களில் பெரும்பாலானவர்கள், திருமணத் திற்கு சிறிது நேரம் முன்பாகத்தான் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர்.

இந்த உலக சாதனை திருமண நிகழ்ச்சி செயற்கை கோள் மூலம் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

## நூற்றாண்டுகள் கண்ட சாதனை மனிதர்

மூன்று நூற்றாண்டுகள் கண்ட அதிசய மனிதராக திகழ்கிறார், அமெரிக்காவின் ஒக்லஹோமாவைச் சேர்ந்த ஹாரிசன் ஹோல்கோம்ப்.

1889-ஆம் ஆண்டு கார்னகி நகரில் பிறந்த இவருக்கு 5 தலைமுறையில் மகன், மகள், பேரன் பேத்திகள் உள்ளனர்.

இவரது மகள் லூசில்லி (85) லியோனாபோர்ட் (84) மகன் லூன் (80) மூவரும் உயிரோடு உள்ளனர்.

ஹாரிசன் ஹோல் ஹோம்ப் மூன்று தடவை திருமணம் செய்தவர். இதில் 2 மனைவிகளை விவாகரத்து செய்து விட்டார்.

''காலையில் நிறைய உணவு சாப்பிடுவது; எப்போதாவது அபூர்வமாக மது அருந்துவது' புகை பழக்கம் இல்லாதது - இந்த மூன்றும்தான் எனது நீண்ட சாதனை ஆயுளுக்குக் காரணம்....'' என்கிறார். ஹோல் ஹோம்ப்.

19, 20, 21 ஆகிய நூற்றாண்டுகளை கண்ட ஹாரிசன் ஹோல்கோம்ப்பின் பெயர் கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளது.

## மூக்கால் எழுதுகிறார்!

கைகளால் காகிதத்தில் எழுதுவதே பலருக்கு கடினமான வேலையாகத் தோன்றுகிறது.

எழுதும் பழக்கம் என்பது கம்ப்யூட்டர், ஜெராக்ஸ் போன்ற எலக்ட்ரானிக் கருவிகளின் வரவால் குறைந்து கொண்டே வருகிறது...

இந்தக் காலத்தில் கொல்கத்தாவில் டபன்தேய் என்பவர் கைகள் இருந்தும், மூக்கால் வேகமாக எழுதிக் கொண்டு இருக்கிறார்.

இவர் காதால் கூட எழுதுவாராம். 32 வயதான இவர் ஒரு வரலாறு பட்டதாரி.

இது தவிர இரண்டு கைகளாலும் ஒரே சமயத்தில் பல்வேறு மொழிகளில் எழுதும் திறன் உடையவராம்.

இந்த சாதனைகளுக்காக விரைவில் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறுவோம் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறார்.

## மணல்கோட்டை!

நெதர்லாந்து நாட்டில் உள்ளது அல்மேர் நகரம். இதற்கு முன் எதற்குப் புகழ் பெற்றதோ, இப்போது மணல் கோபுரத்துக்கு பெயர் பெற்ற நகரமாகிவிட்டது.

2091-அடி உயரத்தில் பிரமாண்டமாக கட்டப் பட்டிருக்கும் இந்த மணல் கோட்டையைப் பார்த்து வியக்க மக்கள் கூட்டம் வந்து போகிறதாம். இதில் வெளிநாட்டுப் பார்வையாளர்களும் அதிகமாம்.

இந்த மணல் கோட்டையை உருவாக்க 1060 டன்கள் மணல் தேவைப்பட்டதாம்.

இது மாதிரியான சாதனை இதுவரை நிகழ்த்தப்பட வில்லை என்ற வகையில் இந்த மணல் கோட்டை கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம் பிடித்திருக்கிறது.

## பல்லால் சாதனை!

பெங்களூர் அருகே உள்ள சென்னபட்னா வட்டத்தைச் சேர்ந்த சின்னக் கிராமம் பட்லு. இங்குள்ள க்வுதமவர்மா, பி.ஏ.பட்டதாரி.

படிப்பை முடித்ததும், உடனடியாக இவருக்கு வேலை கிடைக்கவில்லை. அப்போது ஆரம்பித்ததுதான் தேங்காய் உரிப்பு.

இதற்கென முதலில் அவர் சற்று தனமான பொருட்களை பல்லால் கடிக்கத் துவங்கினார். இதில் பழக்கப்பட்ட அவரது பற்கள், 65 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டையை தூக்கும் அளவிற்கு உறுதியாக இருந்தன.

இதைத் தொடர்ந்து சைக்கிளை பல்லால் கடித்துக் கொண்டு தென்னை மரத்தில் ஏறி இறங்கினார்.

இந்தப் பயிற்சிக்குப் பிறகு தேங்காய் மட்டையை பல்லால் கடித்து உரிப்பதற்கு பயிற்சி எடுத்தார்.

ஓடும் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து 'பாலன்ஸ் செய்தபடி முழு தேங்காயை பல்லால் கடித்தே உரித்து விட்டார்.

இதுமட்டுமல்ல, 38 நிமிடங்களில் 51 தேங்காய்களை உரிப்பது; மோட்டார் சைக்கிள் ஓட்டியபடி ஒரு நிமிடத்தில் 2 தேங்காய்களை உரிப்பது.

மோட்டார் சைக்கிளில் செல்லும் போது குளிப்பது, தூங்குவது, நிற்பது, சாப்பிடுவது என்று பல சாகசங்களையும் செய்து காட்டுகிறார்.

இவர், ஜுடோ, மற்றும் மல்யுத்தம் போன்ற தற்காப்பு கலைகளையும் அறிந்திருக்கிறார்.

# புல்டோசர் ஓட்டும் சாதனைப் பெண்!

பெண்களின் சாதனைகள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருவது, மகிழ்ச்சியைத் தருகிறது.

சைக்கிள், ஸ்கூட்டர் என்று வாகனங்களை ஓட்டத் தொடங்கியவர்கள், ரிக்ஷா, ஆட்டோ என்றுகூட ஓட்டத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த நிலையில் சிறிது வித்தியாசமாக லாரியை ஓட்டத் தொடங்கிய ஒருவர் இப்போது புல்டோசரை ஓட்டத் தொடங்கி இருக்கிறார்.

அவரது பெயர் திலகம். நெல்லை மாநகராட்சியில் லாரி ஓட்டுனராக இருந்தவர். தற்போது சென்னைக்கு மாறி வந்து இங்கும் கனரக வாகனங்களை இயக்கும் வேலை பார்க்கிறார்.

சென்னைக்கு வந்த இவருக்கு இன்னொரு ஆசை. எத்தனை காலத்திற்குத்தான் லாரியையே ஓட்டிக் கொண்டு இருப்பது...?

ரோடு ரோலர், டிரய்லர், புல்டோசர் போன்ற வாகனங் களை இயக்கவும் லைசென்சு வாங்கிவிட்டார்.

இதனால், தமிழ்நாட்டில் சாலைகளில் ஓடக்கூடிய அனைத்து கனரக வாகனங்களையும் இயக்கும் பெண் என்கிற சாதனைக்கும் உரியவராகிவிட்டார் இவர்.

*''எனக்குத் தெரிந்து எல்லா வாகனங்களையும் ஓட்டுகிற அளவிற்கு நமது நாட்டில் பெண்கள் யாரும் லைசென்சு பெறவில்லை. எனவே இச்சாதனையை செய்த முதல் பெண் நானாக இருக்கலாம்''* என்கிறார், திலகம்.

இவர் சொல்கிறார்... *"பெரிய வாகனங்களை விட சிறிய வாகனங்களை ஓட்டுவதுதான் சிரமம்.*

*ஏனெனில் பொக்லின், புல்டோசர் போன்றவை முழுக்க முழுக்க 'ஹைட்ராலிக்' கட்டுப்பாட்டு முறையில் இயங்கக் கூடியவை.*

*எனவே அவற்றை சுலபமாக பயிற்சி எடுத்து இயக்க முடியும். அதிக ரிஸ்க் தேவை இருக்காது. அதனால், கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு பெண்கள் முன் வர வேண்டும். வண்டி சிறியதாக இருந்தால் அவற்றை மிகுந்த கவனமாக கையாள வேண்டும்.*

*புல்டோசர், கிரேன் போன்ற வாகனங்களை இயக்கும் போது சாலையை கவனித்து ஓட்ட வேண்டும்.*

*ஏனென்றால், டயர்கள் பெரிதாக இருப்பதால் வண்டி சற்று குலுங்கலுடன் ஓடும். இந்த வாகனங்கள் வருவது தெரிந்தாலே பாதசாரிகள் நகர்ந்து சென்றுவிடுவார்கள்.*

*சிறிய வாகனம் என்றால் அப்படி அல்ல. குறுக்கும் நெடுக்கும் நடந்து செல்வார்கள். ஒலி கொடுத்தாலும் வழி கொடுக்காமல் அலட்சியம் செய்வர்.*

*எனவேதான் பெரிய வாகனங்களைவிட சிறிய வாகனங்களை இயக்குவது சிரமம் என்கிறேன்."*

இப்படி எல்லா வாகனங்களையும் இயக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்குவந்ததற்கு இவரின் மூத்த சகோதரி மலர்க் கொடிதான் காரணமாம்.

எதிலாவது சாதித்துக் காட்ட வேண்டும் என்று அடிக்கடி அக்காள் கூறிக் கொண்டு இருப்பாராம்.

பத்தாம் வகுப்பு படிக்கும்போது, அக்காளும், பிளஸ்-2 படிக்கும்போது அப்பாவும் இறந்து போனார்கள்.

குடும்பத்தில் சோதனைக்கு மேல் சோதனை வந்து சூழ்ந்து கொண்டது.

*"படிப்பில் என் கவனம் பதியவில்லை.*

*ஏதாவது, சாதிக்க வேண்டும் என்ற வெறியில் டிரைவிங் கற்றுக் கொண்டேன்.*

*அப்போதே எல்லா வாகனங்களையும் ஓட்டிச் சாதிக்க வேண்டும் என்ற தணியாத ஆவல் ஏற்பட்டது.*

*தொடர்ந்து லைட், ஹெவி லைசென்சுகளை எடுத்தேன். எங்கள் குடும்ப வறுமைதான் இந்த அளவில் என்னை சாதனை படைக்க வைத்தது. இந்த என் உயர்வுக்கு என் கணவரும் முக்கிய காரணம் என்பதையும் நான் சொல்லியாக வேண்டும்"* என்று கூறும் இவருக்கு -

இன்னொரு ஆசையும் உள்ளது. இந்தியா சார்பில் ஒலிம்பிக்கில் பந்தயக்கார்களை ஓட்டி சாதனை படைக்க வேண்டும்... அதன் பிறகு... விமானம், விண்வெளி வீராங்கனை என்று பெரிய கனவே இருக்கிறது..." என்கிறார், இந்த சாதனையாளர்.

## 50 அடி கார்!

இடநெருக்கடிக்காக குட்டிக் குட்டி கார்களை தயாரித்து வரும் நிலை ஒரு புறமிருந்தாலும், பணக்காரத் தன்மையை வெளிக்காட்டிக் கொள்ள அவ்வப்போது நீளமான கார்களும் தயாரித்து - சாதனையும் செய்து விடுகிறார்கள்.

காரின் நீளம் 50 அடி. இந்த காரின் பெயர் பெரார்ரி. எட்டு இருக்கைகள் கொண்ட இக்காரில் 10 சக்கரங்கள் உள்ளன. அதில் தங்க முலாம் பூசப்பட்டுள்ள 'ரிம்' உள்ளது. காரின் வேகம் 130 கிலோ மீட்டர்.

இந்தக் காரை யாரும் விலை கொடுத்து வாங்க முடியாது. காரணம் இந்த வகையில் ஒரே ஒரு கார் தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

விலை... 55 இலட்சம் டாலர் சக்கரங்களின் விலை மட்டும் ஒரு இலட்சம் டாலர்.

அரேபிய ஷேக்கிற்காக இத்தாலியில் தயாரிக்கப் பட்டக் கார் இது...!

இந்தக் காரை முறியடிக்கும் வகையில், உலகின் நீளமான கார் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்காரின் நீளம் 180 அடி. இதில் படுக்கை அறை, நீச்சல் குளம் என்று பல வசதிகள் அடங்கி உள்ளன.

## ஒரே கையால்...!

உடலில் ஊனம் இருந்தால், உயர்ந்து வாழ முடியாதா என்ன...? உள்ளத்தில் ஊனம் இருப்பவர்களே உலகில் சிறந்த வாழ்க்கை வாழ முடியாதவர்கள்...

உடல் ஊனமுற்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் ஊனமுற்றோர் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதற்கு பலன் கிடைக்கும் வகையில் ஊனமுற்றோர் பலர் சாதனைகள் பல செய்து அசத்தி வருகிறார்கள்...

அவர்களில் ஒருவர்தான் மயிலாடுதுறையைச் சேர்ந்த ஜெ.லதா.

இவருக்கு ஒரு கை ஊனம்... ஆனால், இவர் மனம் கலங்கவில்லை. ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்று விரும்பி, அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்....

அவ்வூரிலுள்ள மயூரா தட்டச்சுப் பள்ளியில் தட்டச்சுப் பயின்றார்.

ஒரு கையாலேயே தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தட்டச்சு முதுநிலைத் தேர்வு எழுதி இரண்டிலும் வெற்றி பெற்றார்.

## சாணத்தில் ஓடும் கடிகாரம்!

**சா**ணத்திலும் சாதனை படைக்கலாம். அதன் வழியே கடிகாரத்தையும் இயக்கலாம்.

சேலம் - நாமமலையில் பசுக்கள் பாதுகாப்பு இல்லம் செயல்படுகிறது.

இதனை சேர்ந்த சுவாமி ஆத்மானந்தா என்பவர் சாணத்தில் இருந்து மின்சாரம் தயாரித்து, அதன் மூலம் கடிகாரத்தை ஓடச் செய்து இருக்கிறார்.

இரண்டு பிளாஸ்டிக் மக்கில் பசுமாட்டு சாணத்தை நிரப்பி அதில் பாசிட்டிவ், நெகடிவ் தகடுகளை பொருத்தி தனித்தனி வயர்களில் இணைத்து, சுவர் கடிகாரத்தில் பாட்டரி பொருத்தும் இடத்தில் இணைத்து விடுகிறார்.

இதைத் தொடர்ந்து கடிகாரம் டிக்..டிக்...கென்று ஒலியோடு ஓட ஆரம்பித்துவிடுகிறது.

சுமார் இரண்டு கப் சாணத்தை பயன்படுத்துவதன் மூலம் 3 மாதத்திற்கு கடிகாரத்தை தங்கு தடையின்றி இயக்க முடியும் என்றும் இந்த சாதனையாளர் சுவாமி ஆத்மானந்தர் கூறுகிறார்.

## 37 - 47

**மு**ம்பையைச் சேர்ந்த இளம் விமானிகள் ஹிமன்ஷு புஷ்கர்ணா, ஷெஹனாஸ்கான் இவர்கள் இருவரும் இந்து - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்து வதற்காக உலகை வலம் வருகிறார்கள். ஒரே ஒரு என்ஜின் பொருத்தப்பட்ட

விமானத்தில் பயணம் செய்த இவர்கள் 37 நாட்களில் உலகை சுற்றி வந்தார்கள்.

அவர்கள் (1998) சுதந்திர தினத்தன்று அமெரிக்காவிலுள்ள போர்ட்லேண்டில் இருந்து புறப்பட்டனர்.

இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்கு பிறகு இந்து, முஸ்லிம்களுக்கிடையே ஒற்றுமை உணர்வு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

போர்ட்லேண்டில் இருந்து புறப்பட்ட அவர்கள் கனடா, அட்லாண்டிக், போர்ச்சுக்கல், சகாரா ஆகிய பகுதிகளில் சுமார் 12 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் விமானத்தில் பறந்துள்ளனர்.

தொடர்ந்து கல்கத்தா, ஹாங்காங் மற்றும் முக்கிய நகரங்களை கடந்து நியூயார்க்கை சென்றடைந்தார்கள்.

இதன் மூலம் 37 நாட்களில் 47 ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்த சாதனையை ஏற்படுத்தியுள்ளனர்.

## ஓவிய சாதனை!

**1997**-ஆம் ஆண்டில் இருந்து 1999-ஆம் ஆண்டு வரை தேசிய அளவிலான மூன்று விருதுகளை அந்த ஓவியர் பெற்றிருக்கிறார்.

அப்படி என்றால் அந்த ஓவியருக்கு 40, 50 வயது இருக்கும் என்று நினைத்தால் ஏமாந்துதான் போக வேண்டும்.

ஏனென்றால், இந்த சாதனை ஓவியருக்கு வயது 12தான் பெயர் சுகாஸ் சந்த்.

இந்த சாதனை புலி, சென்னை - கோபாலபுரம், டி.ஏ.வி. பள்ளியில் 8-ஆம் வகுப்பு மாணவன்.

சுகாஸ் சந்த்துக்கு மூன்று, நான்கு வயதிருக்கும்போதே வீட்டுச் சுவர்களில் பென்சிலால், சாக்பீஸால் கோடு இழுத்து கிறுக்கத் தொடங்கிவிட்டானாம்.

பொதுவாக இப்படி கிறுக்கும் குழந்தைகளை இரண்டு சாத்து சாத்தி திட்டி வைப்பார்கள் பெற்றோர்கள்.

ஆனால், சுகாஸின் தந்தையும், தாயும் அப்படி ஏதும் செய்யாமல், சுவரில் கிறுக்க நிரம்ப பென்சிலையும், சாக்பீஸையும் வாங்கித் தந்து ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள். அதுவே அவனுக்குப் பெருமையாக இருந்ததோடு ஓவியத்தில் ஈடுபாடும் கொள்ள வைத்திருக்கிறது.

பிறகு என்ன, சுவர் முழுதும் இவர் கை வண்ணம் பூத்ததாம்.

காலப்போக்கில் இந்த கிறுக்கல்களே முறையாக வடிவம் பெறத் தொடங்கியிருக்கிறது.

ஒரு நிலையில் இவனது ஓவியங்களைக் கண்ட இவனது ஓவிய ஆசிரியர் முகில், ஓவிய நுணுக்கங்களைச் சொல்லித் தர இவன் 9-ஆம் வகுப்புப் படிக்கும்போது ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு 3-வது பரிசைப் பெற்றிருக்கிறான். அடுத்தப் போட்டியிலேயே முதல் பரிசைப் பெற்றிருக்கிறான்.

இதுவரை 75 போட்டிகளில் பங்கு பெற்று 60 பரிசுகளை வென்றிருக்கிறான்.

சுகாஸுக்குப் பிடித்தது நவீன ஓவியங்களைவிட, வாட்டர் கலர் மற்றும் ஆயில் பெயிண்டிங்தானாம். வாட்டர் கலரில் நாம் விரும்பிய வண்ணங்களைத் தீட்டிப்

புதுமைகளைச் செய்யலாம். ஆயில் பெயிண்டிங் முறை இப்போது அதிக அளவில் புகழ் பெற்றுவருகிறது.

அகில இந்திய ஓவியப்போட்டிகளை, 'விஜய் இன்பர்மேஷன்ஸ்' என்ற நிறுவனம் ஆண்டுதோறும் ஐதராபாத்தில் நடத்தி வருகிறது.

1998-ஆம் ஆண்டு நடந்த போட்டியில் 9 ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள். அப்போட்டியில் தான்பெற்ற பரிசைக் குறித்து இளம் ஓவியரே சொல்கிறார்...

*"அந்தப் போட்டியில் நான் கலந்து கொண்டபோது, அப்போட்டிக்கு நான் தேர்ந்து எடுத்த 'கரு' எனது வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது.*

*ஆமாம், நமது நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தர எவ்வளவோ பேர் இரத்தம் சிந்தினார்கள், சிறை சென்றார்கள்...*

*அவர்கள் இரத்தம் பட்டு புனிதமாக மாறிய இப்புண்ணிய பூமிக்கு வீர வணக்கம் செய்பவராக நேதாஜியை வரைந்திருந்தேன்...*

*அதையே பரிசுக் குழுவினர் தேர்ந்தெடுத்தனர்.*

*1999-இல் நமது பிரதமர் லாகூருக்கு பஸ் பயணம் மேற்கொண்டதை மையமாக வைத்து வரைந்தேன். அதற்கு தங்கப்பதக்கமும், விருதும் கிடைத்து.*

*ஒவ்வொரு முறை தேசிய அளவில் வெற்றி பெறும்போதும்... சர்வதேச அளவில் அடுத்து சாதனை படைக்க வேண்டும் என்றே எண்ணி வருகிறேன். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறேன்..."* என்கிறான். இவனது தந்தை சிவகணேஷ் பேங்க் ஆப் இந்தியாவிலும், தாய் நாகேந்திரமணி பள்ளி ஆசிரியை யாகவும் பணிபரிங்க வருகிறார்கள்.

## சாப்பாடு வேண்டாம்...

'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்பார்கள்.

மைக்கேல் லோடிட்டோ என்பவருக்கு சாதனை ஏற்படுத்த ஒரு கார் டயர் போதும்.

இவர் கார் டயரை கையில் எடுத்து கரும்பைக் கடிப்பதுபோல் கடித்துத் தின்கிறார்.

இரும்பையும் விட்டு வைப்பது இல்லையாம். இந்த சாதனையாளர்.

## இழுக்க... இழுக்க...

இவர் ஒரு இரப்பர் மனிதர். பெயர் கேரிடர்னர். தன் உடலில் உள்ள தசைகளை இழுத்துக் காட்டுவதில் கில்லாடி.

இப்படி இவர் கழுத்து, முகம், கை, கால்களின் தோல்களை கிளிப் மூலம் இழுத்துக் காட்டி உலக சாதனை ஏற்படுத்தியிருக்கிறார்.

## சாதனை கட்டடம்!

பல நூறு சர்க்கஸ் கலைஞர்கள் தங்களது சாகச முயற்சிகளினால் நம்மை மகிழ்வித்து வருகின்றனர்.

சர்க்கஸ் கலைக்கு உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து மக்களிடமிருந்தும் நல்ல வரவேற்பு உண்டு. சிறுவர்களுக்கு சர்க்கஸ் என்றால் ஒரு அலாதி பிரியம்தான்.

உலகிலேயே மிகப் பெரிய, பழமையான சர்க்கஸ் கூடம் ஒன்று உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பெற்றிருக்கிறது.

அந்தச் சாதனை சர்க்கஸ் கூடத்தின் பெயர், 'சர்க்கியூ டி ஹைறவர்'.

இந்த பழமையான கட்டடம் 1852-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி பிரான்சு நாட்டில் உள்ள பாரீஸ் நகரில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புகழ்பெற்ற சர்க்கஸ் நடைபெறும் கட்டடத்தை கட்டியவர்கள் ஜேக்கிஸ், இக்ணேஷ் கிட்டார்ப் ஆகியவர் களாவர்.

இந்த கின்னஸ் சாதனைக் கட்டடத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அது என்னவென்றால் புகழ்பெற்ற பாரீஸ் நகரத்தில் அமைந்துள்ள கேர் டூ நார்டு என்ற இரயில் நிலையத்தின் மாதிரி வடிவத்தில் இந்த சர்க்கஸ் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நீருக்குள்...

தண்ணீரின்மேல் நீந்தி பலர் சாதனை புரிந்திருக்கும் வேளையில், ஒரு பெண் தண்ணீருக்குள் சுறாமீனைப் போல் வேகமாக நீந்தி உலக சாதனை படைத்திருக்கிறார். அந்தச் சாதனை மங்கையின் பெயர் இன்சி டி புரூஜின்.

இவர், 2000-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடந்த சிட்னி ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டார். 100 மீட்டர் பட்டர் பிளை நீச்சல் போட்டியில் மிக வேகமாக (அதாவது 56.61-நொடியில்) கடந்தார்.

இந்தச் சாதனை 100 மீட்டரில் மிக வேகமாக நிகழ்த்தப்பட்டதாகும். புரூஜின், நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

## சிறந்த தானம்

அளவுக்கு அதிகமாக இருக்கும் பொருளையே ஒருவர் தானமாக கொடுக்க முன் வருவது இல்லை.

இந்த நிலையில் உயிருக்கு ஆதாரமாக கருதப்படும் இரத்தத்தை தானமாக வழங்குவதில் ஒருவர் சாதனையே படைத்திருக்கிறார்...

அந்த மனித நேயமிக்க சாதனையாளரின் பெயர் மாரிஸ் கிரஸ்விக். தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர்.

1994-ஆம் ஆண்டு தனது 18-வது வயதில் இருந்து மாரிஸ் இரத்ததானம் செய்து வருகிறார்.

கடந்த 2003-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9-ஆம் தேதி வரை 188.9 லிட்டர் இரத்தம் தானம் புரிந்து கின்னசில் இடம்பிடித்து இருக்கிறார்.

## 'நாணய' மானவர்

சேமிப்பு என்பது சிறுவயது முதலே சொல்லப் பட்டு வருகிறது.

அதிலும் வித்தியாசமான முறையில் சேமித்து பெயர் பெற வேண்டும் என்ற சிலரின் விருப்பமே பல்வேறு நாட்டு நாணயங்களைச் சேகரிக்க வைத்திருக்கிறது.

அப்படி சேகரிக்கப்பட்ட நாணயங்கள் மூலம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார் இந்தியாவைச் சேர்ந்த, ராகுல் சமந்த்.

இவர் இதுவரை 203 நாடுகளைச் சேர்ந்த நாணயங் களைச் சேகரித்து வைத்திருக்கிறார்.

அதில் 190 நாணயங்கள் மக்கள் ஆட்சி கொண்ட நாடுகளின் நாணயங்களாகும்.

33 நாணயங்கள் மன்னர் ஆட்சி புரியும் நாட்டு நாணயங்களாகும். 6 நாணயங்கள் எல்லை பிரச்சினையின் பிடியில் சிக்கியிருக்கும் நாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட நாணயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு குடும்பமே கின்னஸில்!

ஒரே குடும்பத்தில் உள்ள பலர் ஒரே மாதிரியான படிப்பு, வேலையில் இருப்பது என்பது மிக மிக அதிசயம்.

ஆனால், அப்படி ஒரே மாதிரியான படிப்பு, தொழிலில் இருக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது கர்நாடகா மாநிலத்தில் உள்ள ஒரு குடும்பம்.

கர்நாடகா மாநிலம் பகல்காட் மாவட்டத்தைச் சேர்ந்தவர், இராமண்ணா சோனாட்.

இவரது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் அந்த மாநிலத்திற்கு மட்டுமின்றி, இந்த நாட்டிற்கே பெருமை சேர்த்து உள்ளனர்.

ஆமாம், இராமண்ணா குடும்பத்தில் உள்ள அந்த ஏழு பேரும் டாக்டருக்கு படித்து மக்களுக்கு சேவை செய்து வருகின்றனர் என்பதுதான்.

இதுவரை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் டாக்டர்களாக இருந்தது இல்லை.

அதனால் இது ஒரு சாதனையாக கருதப்படுகிறது. மேலும் இந்தச் சாதனையை உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## தேன்கூடு மனிதர்

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த சாதனையாளர் பிலிப் மெகபி.

இவர் உலக சாதனைக்காக தன் உடலில் இலட்சக் கணக்கான தேனீக்களை கூடு கட்ட வைத்து கின்னஸ் சாதனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார்.

இதன் மூலம் கிடைக்கும் நிதியை ஆப்பிரிக்காவின் நலத் திட்டங்களுக்கு தர உள்ளார்.

## முறியடிக்காத சாதனை!

**1958**-ஆம் ஆண்டு சுவீடன் நாட்டில் நடந்த போட்டியில் பிரான்ஸ் வீரர் பிரன்டைன் மொத்தம் 13 கோல்களைப் போட்டார்.

ஓர் உலக கோப்பை போட்டியில் ஒரு வீரர் போட்ட அதிக கோல் இதுதான்.

இந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 11 விநாடிகளில்.....

உலககோப்பை கால்பந்து போட்டியில் மின்னல் வேக கோல் போட்டு சாதனை படைத்தவர் என்ற பெருமைக்குரியவர், துருக்கி அணி வீரர் வராகன் சுக்கூருக்கு உண்டு.

2002-ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியில் தென்கொரியாவுடன் துருக்கி மோதியபோது ஆட்டம் தொடங்கிய 11-விநாடிகளிலேயே சுக்கூர் முதல் கோலை போட்டுவிட்டார்.

இதற்கு முன்பு யாரும் இவ்வளவு விரைவில் கோல் போட்டது இல்லை என்பது தான் சாதனையே!

## வயது முதிர்ந்த....

வடமேற்கு இலண்டனில் ஹியர் போர்டில் வசித்து வந்தவர்கள் பெர்சி ஆரோஸ்மித் - புளோரன்ஸ் தம்பதி.

ஆரோஸ்மித்துக்கு 105 வயது. புளோரன்ஸ் வயது 100.

கடந்த (2005) ஆண்டு இந்த தம்பதிகள் 80-ஆவது திருமண விழாவைக் கொண்டாடினர்.

இந்த நிலையில் ஆரோஸ்மித் சமீபத்தில் காலமானார். நீண்ட காலம் கணவன் மனைவியாக வாழ்ந்ததற்காக கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்ற இந்த வயதான தம்பதியை 80 ஆண்டுகளுக்குப் பிறகு மரணம் பிரித்து உள்ளது.

## ஆதித்யாவின்....

நியூசிலாந்தில் உள்ள குக் ஜலசந்தியை 9 மணி 8 நிமிடங்களில் கடந்து உலக சாதனை புரிந்தவர் புனேயைச் சேர்ந்த ஆதித்யா ராட் என்பவர்.

26 கிலோ மீட்டர் நீளமுள்ளது இந்த ஜலசந்தி. இதைத்தான் 2005-ஆம் ஆண்டு நீந்தி சாதனை படைத்தார்.

## பாப்கான்

ஜோர்டான் நாட்டுப் பள்ளிச் சிறுவர்கள் சிறுமிகள் சேர்ந்து புதுமையான கின்னஸ் உலக சாதனை ஒன்றை செய்திருக்கிறார்கள்.

மிகப் பெரிய அளவிலான ராட்சதப் பெட்டி ஒன்றைத் தயாரித்து, அந்தப் பெட்டி நிரம்பும்படியாக பாப்கானைத் தயாரித்துக் கொட்டும் சாதனையே இந்தப் புதுமையான சாதனையாகும்.

ஜோர்டானின் தலைநகர் அம்மானில் உள்ள அல்ஹுஸைன் பார்க்கில் இந்த மிகப் பெரிய ராட்சதப் பெட்டியை வைத்து நிரப்பினார்கள்.

(எத்தனை மணி நேரத்தில்? எத்தனைக் குழந்தைகள்?)

## ரன் குவிப்பு!

விக்கெட் கீப்பர் மகேந்திரசிங்தோனி 31.10.2005 அன்று ஜெய்ப்பூரில் உலக சாதனை புரிந்தார்.

ஒரு தின ஆட்டங்களில் 183 ரன்கள் எடுத்தும் அவுட் ஆகவில்லை. 145 பந்துகளைச் சந்தித்து 15 பவுண்டரிகள், பத்து சிக்ஸர்களுடன் 183 ரன்களைக் குவித்தார். இலங்கை அணிக்கு எதிராக இவ்வளவு ரன்களைக் குவித்தார்.

ஆஸ்திரேலியாவின் ஆடம் கில்கிறிஸ்ட் என்ற விக்கெட் கீப்பர் 16.01.2004-இல் ஹோபர்ட்டில் ஜிம்பாப்வேக்கு எதிராக எடுத்த 172 ரன்களை இதன் மூலம் முறியடித்தார்.

டெண்டுல்கர் 1999-ஆம் ஆண்டு 186 ரன்களும், கங்குலி அதே ஆண்டில் 183 ரன்களும் ஒரு தின ஆட்டங்களில் எடுத்தனர்.

அவர்களுக்குப் பிறகு அதிக ரன்கள் எடுத்தது தோனி தான். ராஞ்சி தந்த வலது கை பேட்ஸ்மேனான இவர், ஒரே இன்னிங்ஸில் 10-க்கும் மேற்பட்ட சிக்ஸர் அடித்த மூன்றாவது வீரராகவும் இடம் பெற்றார்.

ஷாஹிட் அப்ஃரிடி (பாகிஸ்தான்) சனத் ஜெயசூரியா (இலங்கை) தலா 11 சிக்ஸர்கள் அடித்து முதலிடத்தில் உள்ளனர்.

ஆனால், அப்ஃரிடி 102 ரன்களும், ஜெயசூர்யா 134 ரன்களும் எடுத்து அவுட் ஆனார். ஆனால் தோனியோ 183 ரன்கள் எடுத்தும் கடைசி வரை ஆட்டம் இழக்கவில்லை என்பதே உச்சமான செய்தியாகும்.

## ஷைனி ஆப்ரஹாம்!

அப்பொழுது அவள் மூன்றாம் வகுப்பு மாணவி. கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வழுத்தாளா என்ற சிறிய கிராமத்தில் படிப்பு.

அது ஒரு சிறிய பள்ளிக்கூடம். பள்ளிக் குழந்தைகளுக்கு ஓட்டப்பந்தயம் நடத்தினார்கள். வீதியே ஓடுகளம். 50 மீட்டர் தூரப் பந்தயம்.

அன்று முதலாவது ஓடிவந்த அந்தச் சிறுமிதான், பின்காலத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் எட்டு தங்கங்களை வென்ற ஷைனி ஆப்ரஹாம்.

இதுவரை எழுபதுக்கு மேல் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளை பெற்றிருந்த போதிலும், 1995-இல் சென்னையில் நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் தூரத்தை 1.59.85 நிமிடங்களில் ஓடி உலக சாதனையை முறியடித்ததை பெரும் பேறாகக் கருதுகிறார்.

## மெரிகாம்....

இந்தியாவிற்கு பெருமைத் தேடித்தரும் விளையாட்டு வீராங்கனைகளில் ஒருவர் எம்.சி.மெரிகாம்.

குத்துச்சண்டை போட்டியில் சாதனை மேல் சாதனை படைத்து வருபவர்.

ரஷியத் தலைநகர் மாஸ்கோவுக்கு அருகில் உள்ள போடோல்ஸ்க்கில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 46 கிலோ பிரிவில் தொடர்ந்து இரண்டாவது முறையாக கடந்த 2005-ஆம் ஆண்டு தங்கப் பதக்கம் வென்று இந்தியாவைத் தலை நிமிரச் செய்திருக்கிறார்.

மணிப்பூரைச் சேர்ந்த இந்த சாதனை மங்கைக்கு கடந்த ஆண்டுதான் திருமணம் நடந்தது.

சில விளையாட்டு வீரர்களுக்கு கோடி கோடியாகக் கொடுக்கும் இதே நாட்டில் தான் மெரிகாம் போன்று சாதனை படைக்கும் வீராங்கனைகளுக்கு நிரந்தர வேலை கூட இல்லை என்பதை நினைக்கும்போது வேதனை யோடு வியப்பாகவும் இருக்கிறது. அவருடைய கணவருக்கும் வேலை கிடைக்கவில்லை என்பது கூடுதலான சோதனையாகும்...?

ஆசிய, காமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்ற பின்னர், அமெரிக்காவில் நடந்த போட்டியில் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த மெரிகாம் சென்ற ஆண்டு துருக்கியில் நடந்த போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார். 2004-இல் நார்வேயில் நடைபெற்ற டான்ஸ் பெர்க் உலகக் குத்துச்சண்டைப் போட்டியிலும் தங்கப் பதக்கத்துடன் சிறந்த வீராங்கனை விருதும் பெற்றார். (இருந்தும் என்ன...?)

## 'சீத்தலி'ன் சாதனை

பெங்களூர் எச்.ஏ.எல். நிறுவனம் தயாரித்த 'சீத்தல்' ரக ஹெலிகாப்டர் இந்திய விமானப் படையில் இடம் பெற்றுள்ளது.

இந்த ஹெலிகாப்டர் அதிக உயரத்தில் பறந்து சாதனை படைத்தது.

எச்.ஏ.எல்.டெஸ்ட் பைலட் கேப்டன் ஏ.எஸ். புடோலா, ஸ்குவாட்ரன் லீடர் எஸ்ஷர்மா ஆகியோர் 'சீத்தல்' ஹெலிகாப்டரில் லடாக் பகுதிக்குச் சென்று இறங்கினர்.

கடல் மட்டத்திலிருந்து 25,150 அடி உயரத்தில் இந்த ஹெலிகாப்டர் பறந்தது. அதிக உயரத்தில் உள்ள, லடாக் பகுதி சாசர் காங்கரி மலையில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் தளத்தில், ஹெலிகாப்டர் இறங்கி உலக சாதனை படைத்தது.

அதிக உயரம், பலத்தக் காற்று சுட்டெரிக்கும் வெயில் ஆகிய பல்வேறு சூழ்நிலைகளுக்கு இடையே இந்த ஹெலிகாப்டர் பறந்தது.

அதேபோல துருவரக ஹெலிகாப்டர் கடல்மட்டத்தில் இருந்து 8,230 மீட்டர் (27 ஆயிரம் அடி) உயரத்தில் பறந்த சாதனை படைத்தது.

இதற்கு முன்பு 1998-இல் வில்லியம் பி.மூன்றாம் கிளெம் என்ற அமெரிக்கர் 7,456 மீட்டர் (24,462 அடி) உயரம் வரை ஹெலிகாப்டரில் பறந்ததே உலக சாதனை.

## சுனாமி.....

**தா**ய்லாந்தில் சுனாமி தாக்கிய புக்கட் கடற்கரையில் கின்னஸ் சாதனைக்காக ஒரே நேரத்தில் ஆயிரக்கணக் கானோருக்கு 'மசாஜ்' செய்யப்பட்டது.

(இந்த எண்ணிக்கை சாதனையால் யாருக்கு என்ன பயன் என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டீர்களா...?)

## அதிக கோல்

**கா**ல்பந்து விளையாட்டில் அதிக கோல்கள் போட்டவர் 'ஃபெரன்ஸ் புஸ்கள்' என்ற ஹங்கேரி வீரர் 1,500 கோல்கள் போட்டு உலக சாதனை படைத்துள்ளார்.

## முட்டை

**206** கிராம் எடை கொண்ட முட்டையொன்றை சீன நாட்டு கோழியொன்று போட்டுள்ளது.

முட்டையைப் பொருத்தவரை முந்தைய உலக சாதனை 148 கிராம்தான். இதனை உக்ரைன் கோழி சாதித்திருந்தது.

சரி... புதிய உலக சாதனை படைத்த புதிய முட்டையின் அளவு எவ்வளவு தெரியுமா?

நீளத்தில் 8.5 சென்டி மீட்டர். அதிகபட்ச விட்டம் 6.1 சென்டி மீட்டர்.

## விபத்து!

**1981**-இல் இந்தியாவில் சமஸ்திபூர் என்ற இடத்தில் ஆற்றின் பாலத்தில் ஏற்பட்ட இரயில் விபத்தில் 800 பேர் அதே இடத்தில் பலியானர்.

இரயில் விபத்துகளில் மிக கோர விபத்து இது என்று கின்னஸ் நிறுவனம் தெரிவித்து உள்ளது.

## அரபிக்கடலில்....

**மு**ம்பை கேட்வே ஆப் இந்தியா தொடங்கி தராம்தர் என்ற முனை வரையிலான 72 கிலோ மீட்டர் தூரத்தை அரபிக்கடலின் பல ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல்,

*17 மணி 51 நிமிடத்தில் நீந்தி சாதனை படைத்துள்ளான் கௌஸ்துப் வேமுரி என்ற 8 வயது 11 மாதச் சிறுவன்.*

*இந்தச் சாதனையைத் தொடரும் முன் இவனுக்குக் காய்ச்சல் 102 டிகிரி இருந்தது. அதையும் பொருட்படுத்த வில்லை, இந்தச் சாதனை அரும்பு.*

## பேசி பேசியே...!

*இங்கிலாந்தில், ஜான்கோல்டிங் என்பவர், பாராளு மன்றத்தில் 11 மணி நேரம் பேசி சாதனை படைத்து இருக்கிறார்.*

*அவர் பேசிய ஆண்டு 1983. இவருக்குப் பிறகு இது நாள் வரை இங்கிலாந்தில் இத்தனை மணி நேரம் யாரும் பேசவில்லை.*

## நீண்ட நாள்

*பேராசிரியர் என்.ஜி.ரங்கா.*

*நிடுப்ரொலு கோகிர்னனி ரங்க நாயருலு என்பது இவரது முழுப்பெயர்.*

*பெயரைப் போலவே பெரிய மனிதர் இவர். இந்தியாவிலேயே அதிக நாள்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்தவர்.*

*விடுதலைப் போராட்ட வீரரும், பாராளுமன்ற நிபுணரும், கல்வியாளரும், தொழிலாளரும், ஏழைகளின் காவலருமான பேராசிரியர் என்.ஜி.ரங்கா, பச்சையப்பன்*

கல்லூரியில் பொருளியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றினார், பேரறிஞர் அண்ணாவின் ஆசிரியர்.

இவர், ஆந்திர மாநிலம் குண்டூரில் 07.11.1900-இல் பிறந்தவர்.

## அரிசியில் கடிதம்!

நமது இந்தியாவில் பரூராடாவைச் சார்ந்த கங்காரம்சோனி என்பவர் ஓர் அரிசியில் கடிதம் எழுதி உலக சாதனைகளை வெளியிடும் கின்னஸில் இடம் பிடித்துள்ளார்.

அந்த கடிதம் 1.75 சதுர அங்குலத்தின் 100 மடங்கு சிறிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதில் இன்னும் அதிசயம் என்னவென்றால் அந்த கடிதத்தில் 42 வார்த்தைகளை எழுதியுள்ளார், சோனி.

எத்தனை வரிகளில் - 25 வரிகளில்

இவரது பொறுமையும், திறமையும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

## கார்டுங்லாவில் கல்யாணம்!

எந்த நிலையிலும் எடுத்த சபதம் முடிப்பேன் என்பர் சிலர். கோவையைச் சேர்ந்த இளைஞர் சுகுமாரும் அந்த வகையைச் சேர்ந்தவர்தான்.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு (1989-90) சீனா, வங்கம், பாகிஸ்தான், நேபாளம், பூடான் ஆகிய நாடுகளுக்கு 35 ஆயிரம் கிலோ மீட்டர் தூர சைக்கிள் பயணம் மேற்கொண்டார்.

மறு ஆண்டே டில்லி, லடாக் மலைப் பாதையில் 6,000 கிலோ மீட்டர் தூர சாகச சாதனையை சைக்கிள் பயணத்தின் மூலம் மேற்கொண்டு முடித்தார்.

இந்த பயணத்தின் போதுதான் காஷ்மீர் மாநிலத்தின் கார்டுங்லா சிகரத்தின் உச்சியையும் அவர் எட்டி யிருக்கிறார்.

'உலகிலேயே அதிக உயரமான இடத்தில் (18,382 அடி) வாகனம் ஓடக்கூடிய சாலை' என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த மலைவழிச் சாலை இது.

இந்த இடத்தின் பெருமையைக் கேள்விப்பட்டதும் 'எனக்குத் திருமணம் என்றால் அது இங்கு தான் நடக்க வேண்டும்' என்று மனதில் உறுதியும் எடுத்தார்.

முடிவு எடுத்துவிட்டாரே தவிர, அதை செயல்படுத்த முனைந்தபோதுதான் அதில் உள்ள சிக்கல்களை அறிந்து கொண்டார்.

'ஒரு மலைச் சிகரத்தில் வைத்துத்தான் திருமணம்' என்றால் எந்தப் பெண்தான் ஒப்புக் கொள்வார்? அப்படியே பெண் ஒப்புக் கொண்டாலும், வீட்டார் ஒப்புக் கொள்வார்களா....?

இவருடைய எண்ணத்தோடு பெண் தேடியபோது ஏமாற்றமே மிஞ்சியது.

இந்த இடைக் காலத்தில் அஞ்சல் வழியே எம்.ஏ. படித்து முடித்தார்.

கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின் கிடைத்தவர் தான் 24 வயது விஜயலட்சுமி. இவர் பி.காம்.பட்டதாரி.

கடந்த 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் நாள் விஜியை இமயமலையின் - கார்டுங்லா சிகரப் பகுதிக்கு அழைத்துச் சென்று தான் நினைத்தது போல் திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் குறித்து அவர் மனைவி சொல்கிறார்:

*"அவர் (சுகுமார்) நிச்சயதார்த்தத்தின்போது தனது எண்ணத்தைக் கூறியதோடு, சைக்கிள் பயண சாதனை யையும் கூறினார். அப்போதே என் சம்மதத்தைக் கூறி விட்டேன். ஒரு சாதனையாளருக்கு உறுதுணையாக இருப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியே.*

*நான் பள்ளியில் படிக்கும்போது என்.சி.சி.யில் மூன்று ஆண்டுகள் இருந்திருக்கிறேன். அவ்வேளையில் நீலகிரி, சிறுவானி, ஆனைமுடி மலைகளில் மலையேற்றம் செய்திருக்கிறேன். அதனால் மலையேறுவதில் பயம் ஏதும் இல்லை"* என்கிறார்.

சுகுமார், 5 நாடுகளில் சைக்கிளில் சுற்றுப் பயணம் சென்றபோது டில்லியில் அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தியையும் சந்தித்து வாழ்த்துப் பெற்றிருக்கிறார். இவரது சாதனையைப் பாராட்டிய பிரதமர் சுகுமாரை 'சூப்பர் குமார்' என்றழைக்க, அன்றிலிருந்து அதையே தனது முழுப் பெயராக்கிக் கொண்டாராம், சுகுமார்.

சரி. எதற்காக இத்தனை உயரத்தில் திருமணம்?

"நாட்டிலுள்ள நதிகளையெல்லாம் ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதற்காகவும், கின்னஸ் சாதனைக்காகவும்தான்" என்கிறார் சாதனையாளர், சுகுமார்.

## தீக்குச்சியில் குறள்!

இளைஞர் நாகராஜனுக்கு அழகான ஓவியம் வரையும் ஆற்றலுண்டு. அதைவிட அழகாக முத்து முத்தாக எழுதும் திறனுமுண்டு.

இதன் காரணமாக பள்ளி நாள்களில் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார். ஆகவே, அழகிய கையெழுத்தை

அடிப்படையாகக் கொண்டு சாதனை செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

அப்போது, தான் படித்த மதுரை தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் இருந்த ஓவிய ஆசிரியர் டொமினிக் மற்றும் தலைமையாசிரியர் பிரான்ஸிஸ் ஆகியோர் இப்போது திருக்குறளை மையப்படுத்தி செய்யும் சாதனைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஆகவே, திருக்குறள் முழுவதையும் தீக்குச்சிகளில் எழுதிப்பார் என்று கூறி ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தனர்.

இதன் காரணமாக உற்சாகம் பெற்ற நாகராஜன் 20-நாள்கள் இரவு பகலாக உழைத்ததன் எதிரொலி இந்த தீக்குச்சியில் திருக்குறள் சாதனை.

தீக்குச்சியின் நான்கு பக்க சொரசொரப்பான பகுதி களை முதலில் பிளேடின் உதவியுடன் சமப்படுத்திய பிறகு ஒரு பக்கத்திற்கு ஒரு குறள் என எழுதியுள்ளார்.

திருக்குறளின் மொத்த அதிகாரம் 133. ஒரு அதிகாரத்திற்கு 10 தீக்குச்சி என 133 அதிகாரத்தையும் 399 தீக்குச்சிகளில் எழுதியுள்ளார்.

மைக்ரோடிக் பென்சிலின் உதவியுடன் எழுதப் பட்டுள்ள இந்த திருக்குறளை படிப்பதற்கு பூதக் கண்ணாடியின் உதவி தேவைப்படுகிறது.

ஆனால், சாதாரணமாக பூதக்கண்ணாடியின் உதவி இல்லாமலேயே இவர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடப் பட வேண்டிய ஒன்றாகும்.

முத்து, முத்தான எழுத்தில் தீக்குச்சியின் மீது ஓவியம் போன்ற காவியமே தீட்டியுள்ளார், இந்த சாதனையாளர் நாகராஜன்.

## ஒரு தாய் 69 குழந்தைகள்!

இரஷ்யாவின் ஷுயா பகுதியைச் சேர்ந்த பியோடர் வெசிலீவ் என்ற பெண், ஒரு தனிப் பெண்; இவரைப் போன்ற ஒரு சாதனையை இதுவரை யாரும் செய்த தில்லை. செய்யப் போவதாகவும் தெரியவில்லை.

அப்படி அவர் என்னதான் செய்தார்...?

அடே...ங்....கப்பா... அதை நீங்களே படியுங்கள்...

மொத்தம் 69. குழந்தைகளை 1725-ஆம் ஆண்டு முதல் 1765-ஆம் ஆண்டு வரை பெற்றெடுத்திருக்கிறார்.

அதில் 67 குழந்தைகள் உயிர் பிழைத்திருந்தன. இதில் சாதனை என்னவென்றால்...

அந்த 69 குழந்தைகளில், 16 செட் இரட்டை குழந்தை களாகவும், 7 செட் மூன்று குழந்தைகளும், 4 செட் 4 குழந்தைகளும் அடங்குவர்.

இவர் சாதனையைப் படித்து விட்டீர்களா...?

இவருக்கு அடுத்த சாதனை பட்டியலில் இருப்பவர் மேரி ஜோனாஸ். இவருக்கு 15 செட் இரட்டை குழந்தைகள் பிறந்தன.

இவை அனைத்தும் ஆண் - பெண் இரட்டையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவருமே கின்னஸ் தாய்மார்கள்!

## கடுகில்....

'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பது பழமொழி.

அந்தக் கடுகிலே லென்ஸ் உதவியின்றி 20 எழுத்துகளை எழுதி சாதனை படைத்துள்ளார் ஊட்டியைச் சேர்ந்த டேனியல் பீட்டர்.

இவர் இத்தோடு, ஒரு அரிசியில் 100-க்கு மேற்பட்ட எழுத்துகளையும், ஓவியங்களையும் வரைந்துள்ளார்.

ஒரு அரிசியில் தேசியக்கொடி தாஜ்மகால், யானை நடப்பது போன்ற ஓவியங்கள் தீட்டியும் சாதனை படைத்துள்ளார்.

இந்த சாதனையாளரின் இலட்சியம் நகத்தில் அழியாத எழுத்துக்களையும், ஓவியங்களையும் தீட்டி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்பதுதானாம்.

## 6 ஆயிரம் கிலோ சாக்லெட்!

இத்தாலி நாட்டினருக்கு சாக்லெட் என்றால் உயிர் - பைத்தியம் என்று கூட சொல்லலாம்.

இதை மற்றவர்களுக்கு எப்படி தெரிவிக்கிறார்கள் பாருங்கள்...

6 ,000 கிலோ எடையில் ஒரு சாக்லெட்டை செய்து அசத்திவிட்டனர். இதைச் செய்ய செலவிட்ட நேரம் 1000 மணி நேரம்.

அப்புறம் என்ன...? உலகின் மெகா சாக்லேட் இதுதான் என்று கின்னஸில் இடம் பிடித்துவிட்டது.

## பூசணிக்காய்!

முழு பூசணிக்காயை சிலர் திருஷ்டிக்காக வீட்டின் முன்னே கட்டுவார்கள். இன்னும் சிலர், திருஷ்டி என்ற பெயரில் அதை வீதியில் போட்டு உடைத்து வாகனங்களை உருண்டு விழ வைப்பார்கள்.

ஆனால், ஒருவர் பூசணிக்காயை நீருக்குள் வைத்து அதை கலை நயத்தோடு நறுக்கி - செதுக்கி சிற்பங்களாக்க

முடியும் என்கிறார் மேற்கிந்திய தீவு ஒன்றைச் சேர்ந்த, மைக் ப்ரான்ட் (28).

கடலின் 17 அடி ஆழத்தில் பூசணிக்காயை வைத்து பொறுமையாக உட்கார்ந்தார் மைக். மூச்சையும், பூசணியையும் பிடித்தபடி கண், காது, மூக்கு வைத்த அருமையான உருவத்தை செதுக்கினார்.

கின்னஸ் சாதனைக்கு தண்ணீருக்குள் காத்து இருந்த சாதனையாளருடன், கின்னஸ் அமைப்பாளர்களும் காத்திருந்தனர்.

## உயர்ந்த சைக்கிள்!

கனடா நாட்டுக்காரர் ஒருவருக்கு உயரமான சைக்கிள் ஓட்ட வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது.

தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் எண்ணத்தில் - வழக்கமான சைக்கிள்களுக்கு இருக்கும் சக்கரங்களை அமைத்தவர், சீட்டை மட்டும் 18 அடி உயரத்தில் வைத்து வடிவமைத்தார்.

அப்புறம் என்ன...? பலரின் முன்னிலையில் சைக்கிளில் ஏறி ஓட்டியும் காட்டினார். பார்த்தவர் அசந்து போயினர். இந்த மனிதர் கின்னஸிலும் இடம் பிடித்தார்.

## பாட்டியும் படிப்பும்!

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் - வெஸ்ட் பாம் பீச் நகரில் இருக்கும் மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு வருகைப் பதிவு எடுக்கிறார், ஆசிரியர்.

மாணவிகள் ஒவ்வொருவராக 'யெஸ் சார்' என்கிறார்கள். உசபா பாப்சன் என்று ஆசிரியர்

அழைத்ததும்... 'யெஸ் சார்' என்று நடுங்கிய குரல் கேட்கிறது.

அந்த குரலுக்குரியவர் 91 வயது பாட்டி.

இரண்டு ஆண்டு படிப்பு (2004) சமீபத்தில்தான் இவருக்கு முடிந்ததாம். சான்றிதழ் வழங்கும் விழாவிற்கு அதற்குரிய ஆடையணிந்து சென்றாராம், இந்தப் பாட்டி.

இந்தச் சாதனை பாட்டி சொல்கிறார்... ***"என் திருமணம் நடக்க வேண்டி 1931-இல் படித்த படிப்பை இடையிலேயே விட்டேன். இப்போது படிப்பில் ஆசை பிறந்தது. அதான் இப்ப படிச்சி முடிச்சேன்"*** என்கிறார், 81 பேரன், பேத்திகளைக் கண்ட இந்த பாட்டி! சாதிக்க வயது தடையில்லையே!

## கணிதத்தில்....

அந்த சிறுவனின் பெயர் உதய் சங்கர். வயது 15 தான்.

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த கல்லூரி விரிவுரை யாளரின் மகன்.

இந்த சிறுவன் கின்னஸ் சாதனைப் படைத்துள்ளான்.

கணிதத்தை தலைகீழாக மனதில் நிறுத்தி, 100 டிஜிட்டில் நம்பரை எப்படி கேட்டாலும் சூப்பராக சொல்கிறான். இவனது நினைவாற்றல் அசத்துகிறது மட்டுமல்ல, மயக்கம் போடவும் வைக்கிறது. 4000 டெசிமல் இடங்களுக்கு உரிய கணித மதிப்பை அட்ட காசமாக சொல்கிறான்.

இவனை கின்னஸ் சாதனை அமைப்பினர் சோதனை செய்து வியப்பில் வீழ்ந்துவிட்டனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

# சாதனை சங்கீதா!

**21** வயது நிரம்பிய புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் நடனத்துறை மாணவி, சங்கீதா.

படிப்பை முடிப்பதற்குள் சாதனை ஒன்றை செய்து முடிக்க எண்ணியவர் தொடர்ந்து பல மணி நேரம் நடனம் ஆட தீர்மானித்தார்.

அதன்படியே புதுச்சேரி கடற்கரையில், புதுச்சேரி மாநில கல்வி அமைச்சர் இலட்சுமி நாராயணன் கொடியசைத்து துவக்கி வைத்தவுடன் நடனத்தை ஆரம்பித்தார். (ஆண்டு - 2003)

அப்போது ஆரம்பித்த நடனத்தை, 3 நாள்களுக்கு தொடர்ந்து ஆடினார். சாதனை படைத்தார்.

இந்த மூன்று நாள்களும் தொடர்ந்து ஆடிய சங்கீதா, 9 மணி நேரத்திற்கு ஒரு முறை ஒரு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

பாரதியார் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 30 நடுவர்கள் 4 மணி நேரத்திற்கு இருவர் என்ற முறையில் சங்கீதாவின் நடனத்தைக் கண்காணித்து பதிவு செய்தனர்.

சாதனையாளர் சங்கீதா சொல்கிறார்:

***''எனக்கு முறையான பயிற்சியும், ஆர்வமும் இருந்ததால் 60 மணி நேரம் ஆடுவதற்கு எந்த சிரமமும் இல்லை.***

***என் பெற்றோர் முன்னிலையில் 60 மணி நேரம் தொடர்ந்து நாட்டியம் ஆடிப் பார்த்திருக்கிறேன். அதனால் தான் இந்தச் சாதனையை என்னால் நிகழ்த்த முடிந்தது. இதற்கு என் தந்தை கொடுத்த ஊக்கமே காரணம். எதையாவது சாதித்துக் காட்ட வேண்டும் என அப்பா***

*அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார். அந்த வார்த்தைதான் இன்று நிறைவேறியுள்ளது. இதற்காக மூன்று ஆண்டுகள் தீவிர முயற்சியும், பயிற்சியும் எடுத்துக் கொண்டேன்.*

*விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி 50 மணி நேரம் தொடர்ந்து பரத நாட்டியம் ஆடி 'லிம்கா' சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.*

*அதை முறியடிக்கும் எண்ணத்தில்தான் 60 மணி நேரத்தை தேர்ந்தெடுத்தேன்.*

*கடந்த 1987-ஆம் ஆண்டு மேடையில் ஆடத் தொடங்கிய நான் இதுவரை பல நூறு மேடைகளில் ஆடி இருக்கிறேன்.*

*பத்மா சுப்பிரமணியம் அவர்கள் சொல்லிக் கொடுத்து நான் ஆட வேண்டும் என்றெல்லாம் எனக்கு இன்னும் ஆசைகள் இருக்கிறது. அவையெல்லாம் விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.''*

பெற்றோர் ஒத்துழைப்பு மற்றும் ஊக்கம் இல்லை என்றால் சங்கீதாவால் இச்சாதனையை நிறைவேற்றி யிருக்க முடியாது என்பதுதான் உண்மை.

மேலும் ஒரு சாதனைக்காக தன்னை தயார் செய்து கொண்டிருக்கிறார், சாதனையாளர், சங்கீதா.

## பாதுகாப்பு....

''என் பைக் திருடு போயிடுச்சு, கார் திருடு போச்சு, பூட்டிய கடையைத் திறந்து கொள்ளை அடிச்சுகிட்டுப் போயிட்டாங்கன்னு'' இனி யாரும் புலம்ப வேண்டாம் என்று, புதுக்கோட்டை - காமராஜபுரம் இரண்டாம்

வீதியைச் சேர்ந்த மெக்கானிக்குகள் சிவக்குமார், நரசிம்மன் இருவரும் ஆறுதல் சொல்கிறார்கள்.

ஆமாம். கள்ளச்சாவி, ஊக்கு, ஹேர்பின், கம்பி என்று எதைப் போட்டாலும் இவர்கள் உருவாக்கியுள்ள கருவி அலாரம் அடிக்கும்.

வாகனத்தின் பேட்டரி அருகே இதைப் பொருத்த வேண்டும்.

அலாரத்துடன் செல்போன் அல்லது டெலிபோனுக்குக்கூட தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

'இங்கு கள்ளச்சாவி போட்டா அங்கு மணியடிக்கும்' என்கின்றனர். ''வீடுகளில், கடைகளில் இருக்கும் பூட்டுக்கும் பொருத்திக் கொள்ளலாம்'' என்கின்றனர், இந்த சாதனையாளர்கள்.

இவர்களின் அடுத்த ஆய்வு ''வாகனங்கள் ஓட பெட்ரோல், டீசல் எதற்கு...? தண்ணீரிலேயே ஓட்ட முடியுமே!'' என்கிறார்கள்.

(அட... அந்த நாள் எப்பங்க வரும்....?)

## சூயிங்கம்....

ஐந்தறிவு ஜீவனைப் போல், அசைபோட்டு விட்டு துப்பும் சூயிங்கத்திலும் (பபிள்கம்) ஒரு சாதனை படைத்து வருகிறார் கனடாவைச் சேர்ந்த, கேரிடச்செல்.

1965-இல் 11 வயது சிறுவனாக இருந்தது முதல் சூயிங்கம் ரேப்பர்களைச் சேகரித்து வந்த கேரி, அதை 'செயினாக வரிசை படுத்த, எட்டு மைல் தூரத்துக்கு நீண்டது.

இதுவரை சுமார் எட்டு பெட்டிகளில் 10 இலட்சத்துக்கு மேற்பட்ட சூயிங்கம் ரேப்பர்கள் சேர்த்துள்ள கேரி, சூயிங்கம் ரேப்பர்களை மக்களிடம் இருந்து வாங்குவதற் கென்று தன் பெயரில் ஒரு வெப்சைட்டே வைத்துள்ளார்.

## காலும் கையும்!

நொண்டிப் பயலே.... கையில்லாதப் பயலே...' அந்த ஊர்க்காரர்கள், அந்த இளைஞனை இப்படி வாய்க்கு வந்தபடி அழைப்பார்கள். அவன் அதைப் பற்றி கவலைப் படுவதே இல்லை.

கை,கால் இல்லை... அவ்வளவுதானே. இதை நான் ஊனமாகவே நினைக்கவில்லை. பிறந்தது முதல் இப்படித்தான் இருக்கிறேன். இயற்கையை குறை சொல்லி என்ன ஆகப் போகிறது? இந்த உடலை வைத்தே சாதிக்க முடியாதா என்ன...? என்று கேட்கும் இவர், வாயில் தூரிகையைப் பிடித்து ஓவியம் வரைந்து சாதனை படைத்து நலமாக வாழ்கிறார்.

இவர் ராஜஸ்தான் மாநிலம் சதாசர் கிராமத்தைச் சேர்ந்த பாகீரத் (31).

(ஊனம் எங்கே இருக்கிறது...?)

## வி.பி.சிங்....

உலகிலேயே பத்திரிகைகளுக்கு அதிக நேரம் பேட்டி அளித்த பிரதமர் வி.பி.சிங்.

இவர் பதவியேற்ற பிறகு இரண்டாவது பத்திரிகை யாளர் சந்திப்பில் 800-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்

களின் கேள்விகளுக்கு டில்லி ஸ்ரீபோர்ட் ஆடிட்டோரியத்தில் இரண்டு மணி நேரம் வரை பதில் அளித்து உலக சாதனை புரிந்துள்ளார்.

## ஏறினார்......

உலகப்புகழ் பெற்ற பாரீஸ் ஈபிள் டவரில் மொத்தம் 729 படிக்கட்டுகள் உள்ளன.

இந்தப் படிக்கட்டுகளை கிளிம்பட் ஆலிவ் என்பவர் 3 நிமிடம் 12 விநாடிகளில் ஏறிக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

## திருமணம்.....

எகிப்து நாட்டைச் சேர்ந்த மியூசிக் ஏஜெண்ட்டான முஸ்தபா சேமீடா என்பவர் 203 முறை திருமணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

## மின்னலில் ஆடு!

''நான் நஷ்டமடைந்திருக்கிறேன். இருந்தாலும் இதுவும் ஒரு சாதனைதான். இதை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் சேருங்கள்....'' என கோரிக்கை வைத்திருக்கிறார் குரோஷியாவைச் சேர்ந்த ஓர் இடையர்.

மிலன் ரபிக். ஒரு நாள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். திடீரென மழை கொட்டத் தொடங்கியது.

அப்போது இறங்கிய ஒரு இடியில் 230 ஆடுகள் ஒரே நேரத்தில் இறந்தன. மிலனுக்கு ஏகப்பட்ட கஷ்டம், நஷ்டம்.

*''ஆடுகளை கொட்டிலில் அடைப்பதற்குள் இடி விழுந்துவிட்டது. இப்படி ஒரே இடியில் 230 ஆடுகள் இறப்பது இதுதான் முதல் தடவையாக இருக்கும். இதை கின்னஸ் புத்தகத்தில் சேருங்கள்''* என்கிறார், மிலன்.

இதுவரை இதுமாதிரியான சாதனை எதுவும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவில்லை. இது பொருத்தமான சாதனையாக இருக்குமேயானால் பரிசீலனை செய்வோம் என்று கின்னஸ் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

## தாண்டலில் சாதனை!

இரஷ்ய வீரர் செர்ஜி புப்காதான் கம்பு ஊன்றித் தாண்டும் வீரர், வீராங்கனைகளுக்கு மாடல். கம்பு ஊன்றித் தாண்டுதலில் சாதனை படைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார், செர்ஜிபுப்கா.

இவர் 35 முறை புதிய சாதனை படைத்தார். 6 முறை உலக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். 1988-இல் சியோல் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற பிறகு ஓய்வு பெற்றார்.

இதே ரஷ்யாவைச் சேர்ந்த எலினா இசன்பயேவா, புப்காவைப் பின்பற்றி 'பெண் செர்ஜி புக்கா'வாக முயன்று முன்னேறினார்.

22 வயதான எலினா 14-வது முறையாக கம்பு ஊன்றித் தாண்டுவதில் உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

லாசனோவில் நடைபெற்ற ஐ.ஏ.எஃப். கிராண்ட்ஃப்ரீ போட்டியில் 4.93 மீட்டர் உயரத்தை எட்டி, சாதனை படைத்துள்ளார்.

இவர், பிரஸல்ஸில் 2004-இல் நடைபெற்ற போட்டியில் 4.92 மீட்டர் உயரத்திற்குத் தாண்டியதே இதற்கு முந்தைய சாதனையாகும். தனது சாதனையை தானே முறியடித்து சாதனை படைத்திருக்கிறார், இசன்பயேவா.

## அப்படிபோடு கோடரியை...!

இப்படியும் ஒரு சாதனையா...?

கனடா நாட்டில் நியூ பருன்ஸ் விக் என்ற இடத்தில் 1991-இல் 18.28 மீட்டர் நீளமும் 7 மீட்டர் அகலமும் 7 டன் எடையும் கொண்ட உலகின் மிகப் பெரிய கோடரி ஒன்றை தயாரித்து சாதனை புரிந்துள்ளனர்.

## பீங்கான் சாதனை!

ஜப்பானில் மிசுமாமி என்ற இடத்தில் இனாட்சு டவுன் பிளானிங் அசோசியேசன் என்ற நிறுவனம் 1996-இல் மிகப் பெரிய பீங்கான் தட்டைத் தயாரித்தனர்.

இதன் விட்டம்: 28 மீட்டர். 9 அடி, 2 அங்குலமாகும்.

## சூட்கேஸ்....

இந்தியாவில் குஜராத் மாநிலம் வதோதாரா என்ற இடத்தில் 'சேனீ ஸ்போர்ட்ஸ் வேர்' என்ற நிறுவனம் 4.6 மீட்டர் நீளமும் 2.66 மீட்டர் அகலமும் 1.26 மீட்டர் உயரமும் கொண்ட ராட்சத சூட்கேசை 1999-இல் தயாரித்து கின்னஸ் புத்தகத்தில் பதிவு பெற்றுள்ளது. இதுவே உலகின் மிகப் பெரிய பெட்டியாகும்.

## தண்ணீர் கேன்!

அமெரிக்காவில் - நியூயார்க்கில் 2000-இல் மிகப் பெரிய தண்ணீர் கேன் தயாரித்தனர்.

இதன் உயரம்: 4.7 மீட்டர் (155 அடி) ஆகும். எடை: 907.1 கிலோ. கொள்ளளவு: 2000 காலன் அளவு நீர் அல்லது எண்ணெய் நிரப்ப முடியும்.

## சோபா....

இத்தாலி, இண்டஸ்ட்ரியல் நேட்சுகி எஸ்.பி.ஏ. என்ற நிறுவனம் 2001-இல் 35.11 மீட்டர் நீளமுள்ள சோபாவைத் தயாரித்து சாதனை புரிந்துள்ளனர்.

இதன் மொத்தப் பரப்பளவு 2690 சதுர அடிகளாகும். இதன் நீளம் 115 அடிகள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு தெருவில் உள்ளவர்கள் அனைவரும் தாராளமாக அமர முடியும்.

ஆனால், எந்த வீட்டிலும் போட்டு உபயோகப்படுத்த முடியாத சாதனை சோபா இது.

## 400 முறை

சார்லஸ் ரோஸ் 31 வயது கனடா நாட்டு ஹாலிவுட் நடிகர். 'ஸ்டார் வார்ஸ்' என்ற திரைப்படத்தை 400 முறை பார்த்துச் சாதனை புரிந்துள்ளார்.

## வசூல் சாதனை

2004-இல் 'தி லார்டு ஆஃப் திரங்க்ஸ் - தி ரிடர்ன் ஆஃப் தி கிங்' (கடைசி பாகம்) படம் 67 நாள்களில் 4500 கோடி ரூபாய் சம்பாதித்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளது.

இதுவரை 1997-ஆம் ஆண்டு வெளியான 'டைட்டானிக்' படம் இதே வசூலை 77 நாள்களில் சம்பாதித்தது

தான் சாதனையாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

## கேக்...

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் 49 அடி நீளம் 3 அடி அகலம் கொண்ட பிறந்த நாள் கேக்கின் மீது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 27,000 மெழுகு வர்த்திகளை 47 பேர் ஒன்றரை நிமிடத்தில் ஏற்றி, கின்னஸ் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இதற்கு முன் அமெரிக்காவின் ஒஹையோவில், 1993-இல் 12,432 பிறந்த நாள் மெழுகுவர்த்திகள் ஏற்றியது தான் சாதனையாக இருந்து வந்தது.

இப்போது அதைவிட இரு மடங்கு மெழுகு வர்த்தி களை ஏற்றி முந்தைய சாத்னையை முறியடித்துள்ளனர்.

இந்த ஏற்பாட்டினை செய்தவர் அமெரிக்கரான அஷ்ரி தஃபர்மேன். தன் ஆன்மிக குருவான ஸ்ரீசின்மயாவின் 74-வது பிறந்த நாளைக் கொண்டாடியபோதுதான் இச்சாதனை நிகழ்ச்சி நடந்துள்ளது.

அஷ்ரிதஃபர்மேனுக்குக் கின்னஸ் சாதனை நிகழ்த்துவது ஜாங்கிரி தின்பது போன்று.

இதற்கு முன் 97 கின்னஸ் சாதனைகளை நிகழ்த்தி, அதிக சாதனைகளை நிகழ்த்தியதற்காகவும் கின்னஸ் புத்தகத்தில் சிம்மாசனமே போட்டிருக்கிறார் இந்தக் கின்னஸ் சாதனையாளர் என்பது கூடுதலான செய்தி யாகும்.

## நாய்.....

இங்கிலாந்தில் 1991-இல் மூன்று நாட்கள் பிர்மிங்லன் என்ற இடத்தில் நாய் கண்காட்சி நடைபெற்றது. இதில் 22,993 நாய்கள் பங்கேற்றன.

நாய்க் கண்காட்சியில் அதிக எண்ணிக்கையில் நாய்கள் கலந்து கொண்டது, இந்த நிகழ்ச்சியே ஆகும்.

இது கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளது.

(நன்றியுள்ள ஜீவன்கள் கின்னஸில் இடம் பெறுவதில் தவறு ஒன்றுமில்லையே!)

## புறா சாதனை!

1996-இல் புறா ஒன்று சாதனை படைத்திருக்கிறது. ஆமாம், பின்லாந்தில் பறக்க விடப்பட்ட புறா 26,000 கிலோ மீட்டர் பறந்து ஆஸ்திரேலியாவை வந்தடைந்திருக்கிறது.

## யாருக்கு ஊனம்!?

தீயணைப்பு படை வீரர்களின் பணி கடினமானது; ஆனால், புனிதமானது. இதில் நல்ல தேர்ச்சி பெற்றவர் களுக்கே இவ்வேலை கடினமானதாகும்.

இதில் இரண்டு கால்களுமே இல்லாத ஒருவர் பணியாற்ற முடியுமா...? முடியும் என்கிறார் ஒரு வீரர்.

இவர் பெயர், ஜானிகிங். வயது 43. அமெரிக்கா விலுள்ள கொலராடோ மாநிலத்தைச் சேர்ந்தவர். கேஸ்டல்ராக் என்ற இடத்தில் வாழ்ந்து வந்த இவர், முன்னாள் இராணுவ வீரர்.

வியட்நாம் நாட்டின் மீது அமெரிக்கா படை எடுத்த போது, அதில் பணியாற்றிய இவர் கண்ணிவெடிக்கு தனது கால்களை பலியாகக் கொடுத்தார்.

ஆனால், உள்ளத்தில் உறுதியும் வீரமும் குறையாமல் வளர்த்தார்... எதையாவது சாதிக்க வேண்டும், எப்படி யாவது சாதிக்க வேண்டும்... உடல் ஊனத்தால் முடங்கிப் போய் மூலையில் உட்கார்ந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

இந்த வேளையில், தீ அணைப்பு வீரர்களுக்கான தேர்வு ஒன்று நடந்தது.

தீயணைப்பு படை தலைவரைச் சந்தித்து வேலை கேட்டார்.

பாதி மனிதராக இருந்த ஜானியை ஏளனமாகப் பார்த்துச் சிரித்தார்.

'என்னை அப்படி பார்க்காதீர்கள். என்னால் சாதித்து காட்ட முடியும். நம்புங்கள். தீயணைப்பு பயிற்சி எடுக்க அனுமதி மட்டும் கொடுங்கள்; நான் சாதித்துக் காட்டு கிறேன்' என்றார்.

அரை மனதுடன் தலைவர் ஒப்புக் கொண்டார்.

மூன்று மாத பயிற்சியை மிக அற்புதமாக முடித்தார். நூலேணியை பிடித்து குதிப்பது, படிகளில் ஏறுவது என்பது உட்பட பல பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்தார்.

பயிற்சி முடித்தும் அவரை முழுமையான தீயணைப்பு பணியில் ஈடுபடுத்த, தலைவர் விரும்பவில்லை; அலுவலக வேலைகளையே கொடுத்து வந்தார்.

இந்த நிலையில், பல மாடி கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அப்போது, பணியில் போதிய வீரர்கள் இல்லை. இந்த வாய்ப்பை ஜானி பயன்படுத்திக் கொண்டார். தீயணைப்பு வண்டியுடன் கிளம்பிவிட்டார். படபடவென படிகளில் பைப்புடன் ஏறி தீயை அணைக்க தண்ணீரை பீய்ச்சி அடித்தார்.

இவரது செயல் வேகத்தை பார்த்து மற்ற தீயணைப்பு வீரர்கள் வியந்து போனார்கள். இந்தச் சாதனைக்குப் பிறகு தீயணைப்பு பயிற்சி ஒருங்கிணைப்பாளராக பதவி உயர்வு பெற்றார் ஜானி.

*"கால்களை இழந்ததும் எனது வாழ்க்கை பறி போய் விட்டதாக உணர்ந்தேன். அழுது புலம்பினேன். இரவு பகலாக குடித்தேன்.*

*ஒரு நாள் தனிமையில் அழுவதை விட்டு, சிந்தித்தேன். சாதனை படைக்க சபதம் எடுத்தேன். அது நிறைவேறி விட்டது"* என்று மகிழ்ச்சியோடு துள்ளி குதிக்கிறார், சாதனையாளர் ஜானி கிங்.

இவரது சாதனை ஊனமுற்றவர்களுக்கு ஊன்று கோலாய் அமையும் என்பது உறுதி!

## கடிதங்கள்....

பேஹ்ராம் தஸ்தூர் என்பது அவர் பெயர். இவர் 'பாம்பே பார்ஸி பஞ்சாயத்' என்ற அமைப்பில் தலைமை அதிகாரியாக இருக்கிறார்.

இவர், 1955-இல் தொடங்கி கடந்த 2005-ஆம் ஆண்டு வரை பல்வேறு பத்திரிகைகளின் 'ஆசிரியருக்குக்

கடிதங்கள்' பகுதிக்கு இவர் எழுதி பிரசுரமான கடிதங்கள் 2493.

இவரது இந்தச் சாதனை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

இதற்கு முந்தைய சாதனையாளரும் ஒரு இந்தியரே. சுமார் 1600 கடிதங்கள் எழுதியவர் டில்லியைச் சேர்ந்த சுபாஷ் சந்திர அகர்வால் என்பவர்.

தஸ்தூர் எழுதிய கடிதங்களில் முக்கியமான ஒன்றை இங்கே குறித்தேயாக வேண்டும்.

1967-இல் அன்றைய குஜராத் அரசு ஒரு மகா யாகத்திற்குத் திட்டமிட்டிருந்தது. பல நாட்கள் நடத்த விருந்த இந்த யாகத்தைக் கண்டித்து தஸ்தூர் ஒரு பத்திரிகைக்குக் கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தில் ''நாட்டில் பல குடும்பங்கள் ஒரு வேளை சோற்றுக்கே அவதிப்படும்போது, பல 'டன்' கணக்கில் உணவு தானியம் இந்த யாகத்தில் வீணாக்குவது தேவைதானா?'' எனச் சாடியிருந்தார்.

இதைத் தொடர்ந்து பல முன்னோடி பத்திரிகைகளும் குரல் கொடுக்கவே குஜராத் அரசு அந்த யாகத்தை நடத்துவதையே கைவிட்டுவிட்டது.

## மணம் வீசும்...

அகமதாபாத்தைச் சேர்ந்தவர் மெர்ஜ்பன் லெகஹாலா.

இவர், உலக சாதனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

ஆமாம், ஒரு சாண் ஊதுபத்திக்கு பதிலாக 14 அடி 9 அங்குல நீள மூங்கில் கழியில் ஊதுபத்தியை தயாரித்தார்.

மூன்று வண்ணங்களில் உருவாக்கப்பட்ட இந்த மூங்கில் கழியில் வாசனை திரவியங்களை ஊதுபத்தி போல் தயாரிக்க இவருக்கு 6 மாதம் பிடித்திருக்கிறது.

'லிம்கா சாதனை'ப் புத்தகத்தில் இடம் பெற்ற இவரது இந்த சாதனை விரைவில் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெறும் என்று எதிர்பார்த்து காத்திருக்கிறார், சாதனை யாளர்.

கின்னஸ் புத்தகத்தில் இவரது இந்த சாதனை இடம் பெற்றால், இவர் தயாரித்த 14 அடி 9 அங்குல ஊதுபத்தியே உலகில் மிக உயரமான ஊதுபத்தியாகும்.

(இந்த ஊதுபத்தியை நாம் வாழைப்பழத்தில் குத்தி வைக்க முடியாதே என்று எண்ணுகிறீர்களா...?)

## குளத்தில் மூழ்கிய சோதனை!

**சா**வை நினைத்தால் சாதனை படைக்க முடியாது என்பது சாதனையாளர்களுக்குத் தெரியும்.

அதனால்தான் மலை உச்சியில் இருந்து குதிக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மைல் வேகத்தில் விமானத்தில் பறக்கிறார்கள்; கார்களை, பைக்குகளை ஓட்டுகிறார்கள்.

அந்த வேளையில், அவர்கள் சாவைப் பற்றி நினைப்பது இல்லை; சாதனையைப் பற்றி மட்டுமே நினைப்பார்கள்.

அப்படி நினைத்த ஒரு சாதனையாளரின் சோதனைக் கதையே இது?..

'லிம்கா' புத்தகத்தில் இடம் பிடித்த சாதனையாளர், நீச்சல் வீரர் ஷியாம்.

கேரளாவைச் சேர்ந்த இவர் நீச்சலில் சர்வதேச சாதனை படைக்க விரும்பினார்.

கை, கால்களை எல்லாம் இரும்பு சங்கிலியால் பிணைத்துக் கொண்டு, நீச்சல் மூலம் ஆங்கிலக் கால்வாயைக் கடக்க வேண்டும் என்பது அவரது ஆசை.

சங்கிலியால் கை, கால்களை முழுமையாக கட்டிக் கொண்டு, குளத்தில் பயிற்சிக்காக குதித்தபோது அவருக்கு யாருமே எதிர்பார்க்காத மரணம் நிகழ்ந்துவிட்டது....

நீச்சல் போட்டிகளில் 'பட்டர்பிளை' 'பிரீஸ் டைல்' போன்றவை எல்லோருக்கும் தெரியும். இதில் புதிதாக ஷியாம் 'டால்பின்' ஸ்டைல் என்பதனை உருவாக்கினார்.

கை, கால்களைக் கட்டிக் கொண்டு 'டால்பினைப் போல நீந்துவது அதன் சிறப்பியல்பு.

அத்தகைய பயிற்சியில் அவர் ஈடுபட்டபோதுதான் துரதிஷ்டவசமாக மரணம் ஏற்பட்டுவிட்டது.

10 வயது முதலே சாகசங்களில் ஈடுபாடு கொண்ட ஷியாமுக்கு கிரிக்கெட், கராத்தே, குங்பூ போன்றவை களிலும் அதிக ஆர்வம் உண்டு.

கை, கால்களை கட்டிக் கொண்டு 'டால்பின் ஸ்டைல்' நீச்சல் மூலம் ஆங்கிலக் கால்வாயை கடக்க வேண்டும் என்பது ஷியாமின் இலட்சியமாக இருந்தது.

இங்கிலாந்தையும், பிரான்சையும் இணைக்கும் 316 அடி உயரமுள்ள பாலத்தில் கிரேனை நிறுத்தி 500 அடி

உயரத்தில் இருந்து குதித்து நீந்த வேண்டும் என்பதுதான் ஷியாமின் கனவாக இருந்தது. அது கனவாகவே போய் விட்டன.

32 கிலோ மீட்டர் தூரத்தை 16 மணி நேரத்தில் கடக்க திட்டமிட்டிருந்தார் ஷியாம். இப்படி ஷியாமின் எல்லா கனவுகளுமே அந்த குளத்திலேயே மூழ்கிப்போய் விட்டது.

## முத்தச் சாதனை

முத்தம் இனிமையான நான்கு எழுத்து வார்த்தை. அது மனிதர்களின் நாடி துடிப்புகளில் செய்யும் சேட்டையோ சொல்லிமாலாது.

ஒரு தடவை அழுத்தமாக முத்தம் கொடுத்தால் 250 பாக்டீரியா கிருமிகள் ஒருவர் உடலில் இருந்து பரவுகிறதாம்.

முத்தம் கொடுப்பதில் உலக சாதனையே படைத்திருக்கிறார்கள். 1989-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் பெல் என்பவர் 8 மணி நேரத்தில் 4,500. பெண்களை முத்தமிட்டு இந்த உலக மகா முத்தச் சாதனையை கின்னஸில் பதித்திருக்கிறார்.

## இலட்சம்...

கொலம்பியா நாட்டைச் சேர்ந்தவர் நார்பெர்டோ (35). புக்கரமங்கா என்ற இடத்தில் ஐந்து இலட்சம் ஆப்ரிக்க தேனீக்களை தன் மீது மொய்க்கவிட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

## மெகா பூசணிக்காய்

**100** கிலோவுக்கு மேல் எடையுள்ள மெகா மெகா பூசணிக்காயை விளைவித்திருக்கிறார்கள்.

சீன நாட்டின் ஹெபேய் மாநிலத்தில் பெய்தேஹி என்ற இடத்திலுள்ள வேளாண் பூங்காவில் இதேபோல இன்னொரு பூசணியும் விளைந்திருக்கிறது.

## தண்ணீரில் சைக்கிள் ஓட்டினார்....

எச்.வீரமுத்து. இவர் நீச்சல் பயிற்சியாளர். தன் வாழ்நாளில் ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை இதயத்தில் எப்போதும் பதித்திருப்பவர்.

அதனால், இவர் (08.09.2006) ஈஞ்சம்பாக்கம் கவுரி அம்மன் கோயில் குளத்தில் பொதுமக்கள் முன்னிலையில் சைக்கிள் ஓட்டினார்.

750 சதுர மீட்டர் சுற்றளவு கொண்ட குளத்தை 20 நிமிடத்தில் சைக்கிளில் சுற்றி வந்தார்.

தண்ணீரில் மிதந்து செல்லும் வகையில், சைக்கிளை வடிவமைத்துள்ளார், இவர்.

இந்த சாதனை எப்படி என்று கேட்டதற்கு அவர் சொல்கிறார்.

***''கடந்த 1992-இல் வி.ஜி.பி. நீச்சல் குளத்தில் தொடர்ந்து 10 மணி நேரம் மிதந்து சாதனை செய்தேன்.***

***பின்னர், 1994-இல் எம்.ஜி.எம். மீன்பிடி துறைமுகப் பகுதியில், உடலில் மோட்டார் பொருத்திக் கொண்டு நீரில்***

*மிதந்தபடி 6 கிலோ மீட்டர் தூரத்தை ஒரு மணி நேரத்தில் கடந்தேன்.*

*பிறகு, 1996-இல் கிஷ்கிந்தா ஏரியில் உடலில் மோட்டார் பொருத்தி நீரின் மேல் மிதந்தபடி 15 கிலோ மீட்டர் தூரத்தை ஒன்றரை மணி நேரத்தில் கடந்து சாதனை படைத்தேன்.*

*இதெற்கெல்லாம் காரணம்...*

*இப்படி தண்ணீரில் சைக்கிள் ஓட்டும் சாதனையை ஒரு முறை தொலைக்காட்சியில் பார்த்தேன்.*

*தண்ணீரில் சைக்கிள் மிதப்பதற்கு வசதியாக அவர்கள் காற்றடைத்த பலூனை பயன்படுத்தியிருந்தனர்.*

*அதற்கு பதிலாக நான், இரண்டு பக்கமும் 'தெர்மாக் கோல் தட்டைகளை இரும்புக் கம்பிகளினால் இணைத்து சைக்கிள் தண்ணீரில் மிதக்கும் வகையில் வடிவமைத்தேன். சைக்கிள் பெடலை சுற்றுவதன் மூலம் இயங்கச் செய்து நீரில் நகர்ந்து செல்ல பயன்படுத்தியுள்ளேன்.*

*இதற்கு முன் 64 மணிநேரம் தொடர்ந்து தண்ணீரில் மிதந்ததுதான் உலக சாதனை. அதை முறியடிக்க 100 மணி நேரம் தண்ணீரில் மிதக்கவும் மேற்கொண்டுள்ளேன். அடுத்த ஆண்டும் என் சாதனை நிகழ்ச்சி தொடரும்''* என்கிறார்.

54 வயதாகும் இந்த சாதனையாளர் ஈஞ்சம்பாக்கம் டாக்டர். ஆர்.என்.ஆர். தெருவில் வசித்து வருகிறார். இங்கே 'திரி ஸ்டார் ஸ்போர்ட்ஸ் கிளப்' என்ற பெயரில் தொடங்கி இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை வளர்த்து வருகிறார்.

இதற்கு முன்னர், வி.ஜி.பி.கோல்டன் பீச் மற்றும் கிஷ்கிந்தாவில் நீச்சல் பயிற்சியாளராகவும் இந்த சாதனை வீரர் பணியாற்றியுள்ளார்.

## குளிர்ச்சி தரும் புடவை!

**ச**ணல், வாழைநார், பைனாப்பிள் நார், மூங்கில், வெட்டிவேர், தேங்காய் நார், பனை ஓலை, ஜரிகை, ஒரிசாவில் கிடைக்கும் செவ்வாய் புல், அசாமில் கிடைக்கும் ரெமி, வாட்டர் ரீட், பட்டு, பருத்தி என்று 30 இயற்கை நார்களைக் கொண்டு புடவை தயாரிக்க முடியுமா...? முடியும் என்கிறார், சென்னை - அனகா புத்தூரைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளி, சேகர்.

இப்படி சொல்லும் இவர், கின்னஸ் சாதனைக்காக விண்ணப்பமும் செய்திருக்கிறார்.

இவர், ஒரு புடவை தயார் செய்ய இரண்டு நாள் ஆகிறதாம். ஆனால், புடவைக்கான இயற்கை நார்களை அலைந்து, திரிந்து எடுத்து வர மூன்று மாதம் எடுக்கும் என்கிறார்.

இந்தப் புடவையை அணிந்தால், உடல் குளிர்ச்சியாக இருக்குமாம்.

30 வகை இயற்கை நார்களில் தயாரான முதல் புடவை இதுதான் என்பதால் கின்னஸில் இடம் பிடிப்பேன் என்று நம்பிக்கை இழையோடு பின்னிப் பேசுகிறார். இதுவரை ஐந்து புடவைகளை தயாரித்துள்ளார்.

கின்னஸில் இடம் பெற்ற பிறகு அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டிருக்கிறார். ரூபாய்

1200-க்கு விற்கவும் முடிவு செய்துவிட்டார். அனகாபுத்தூர் சணல் நெசவாளர் சங்க தலைவராகவும் உள்ள இந்த சாதனையாளரின் வயது 42.

## பொங்கல் சாதனை!

திருவனந்தபுரம் அருகேயுள்ள ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயில் மிகவும் சிறப்பு பெற்ற கோயிலாகும்.

பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படும் இக்கோயிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் பொங்கல் திருவிழா சிறப்பாக நடத்தப்படும்.

பெண்கள் மட்டுமே கலந்து கொள்ளும் இந்தப் பொங்கல் விழாவில் ஒரே நேரத்தில் இலட்சக் கணக்கான பெண்கள் கலந்து கொண்டு பொங்கலிடுவர்.

இந்த ஆண்டு (2006) மார்ச் மாதம் 13-ஆம் தேதி நடந்த பொங்கல் விழாவில் 10 இலட்சம் பெண்கள் கலந்து கொண்டு பொங்கலிட்டனர்.

இது தொடர்பாக கின்னஸ் புத்தக நிறுவனத்திற்கு ஆற்றுக்கால் கோயில் நிர்வாகம் சார்பில் தகவல் அனுப்பப் பட்டது.

அதை பரிசீலித்த கின்னஸ் புத்தக நிறுவனத்தினர் 10 இலட்சம் பெண்கள் கலந்து கொண்டு பொங்கலிட்டதை உறுதி செய்தனர்.

## ஸ்கேட்டிங்...

அவன் சிறுவன். வயது ஐந்துதான். குவாலியரைச் சேர்ந்தவன். அவன் பெயர் மஸ்கான் குப்தா.

இவன் ரோலர் ஸ்கேட்டிங் விளையாட்டில் சாதனை படைத்து வருகிறான்.

வரிசையாக நிறுத்தப்பட்ட 40 டாடா சுமோ கார்களுக்கு அடியில் ஸ்கேட்டிங் செய்தபடி நுழைந்து வெளியேறி உலக சாதனை படைக்க திட்டமிட்டு அதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறான். எதிர் காலத்தில் இந்த நம்பிக்கை நாயகன் கின்னஸில் இடம் பிடிப்பான் என்பது உறுதி.

## தாவி, தாவி...

குதிரையும், மானும், சிறுத்தையும், புலியும் பல மீட்டர் தூரம் தாவும் ஆற்றல் பெற்ற விலங்குகள் என்பதை அறிவோம்.

***"அவர்கள்தான் மீட்டர் கணக்கில் தாவுவார்களா? குள்ளமாகவும் குட்டை காலையும் பெற்ற எங்களால் அப்படி தாவ முடியாதா...?***

***கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்க முடியாதா?"*** என்று ஒரு ஐந்து மாதப் பன்றிக்குட்டி நம்மைப் பார்த்து கேட்பதுபோல், ஒரு சாதனையைச் செய்து இருக்கிறது...

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஐந்து மாத பன்றிக்குட்டி. அதன் பெயர் மிஸ் பிக்கி.

இது 331 மீட்டர் தூரம் தாண்டிக் குதித்து, கின்னஸ் புத்தகத்தில் நின்றுவிட்டது.

## சாதனை சித்தார்த்!

சித்தார்த், லிம்கா சாதனைப் புத்தகத்தில், டிரம்ஸ் வாசிப்பதில் 2003 மற்றும் 2004 என இரண்டு ஆண்டுகளிலும் இடம் பிடித்துள்ளான்.

தேசிய அளவில் டிரம்ஸ் வாசிப்பதில் சிறிய வயதிலேயே சாதனை படைத்துள்ளான்.

மூன்று வயதிலேயே டிரம்ஸின் ஸ்டிக்கைத் தொட்ட இவன், இதுவரை பல மேடைகளைக் கண்டிருக்கிறான். பல பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறான்.

இவன் தனது ஏழு வயதில் ஜனாதிபதி மாளிகையில் டிரம்ஸ் வாசித்து (2004) மேதகு ஜனாதிபதி அப்துல் கலாமின் வாழ்த்தையும் பெற்றிருக்கிறான்.

இந்தச் சந்திப்பு இவனை கின்னஸ் சாதனை படைக்கத் தூண்டியுள்ளதாக இச்சாதனை 'குட்டி'யே சொல்கிறான்.

ஒன்பது வயதாகும் இவன், தற்போது 12 மணி நேரம் தொடர்ந்து டிரம்ஸ் வாசிக்கும் திறமை கொண்ட இவன், இன்னும் இரண்டு ஆண்டுகளில் 24 மணி நேரம் தொடர்ந்து டிரம்ஸ் வாசித்து கின்னஸிலும் இடம் பெறுவேன் என்கிறான்.

இவனது தாய் வித்யாவும், தந்தையும் இசைக் கலைஞர்களே...!

இவனது புகழ் ஒலி உலகெலாம் ஒலிக்க வாழ்த்து வோம்!

★★★


168